

# செங்காந்தள் - அன்பு

முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ்

திரு. ஜெ. பா. சாம் செல்வகுமார்

புத்தகக்குறிப்பு

9 789391 115203



# செங்காந்தள் - அன்பு

## Title Verso

| | | |
|---|---|---|
| **Title of the Book** | : | **Chenkaantal - Anbu** |
| **புத்தகத்தலைப்பு** | : | **செங்காந்தள் - அன்பு** |
| **Editors'** | : | **Dr. G. Antony Suresh &<br>Mr. J. B. Sam Selvakumar** |
| **First Edition** | : | 2022 |
| **Pages** | : | 124 |
| **Price** | : | 350 |
| **ISBN Number** | : | 978-93-91115-20-3 |

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

**பதிப்புரிமை / Copyright © 2022 கட்டுரையாளர்களுக்கு /Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் *முருகன்* என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சாரப் பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அக மகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

# செங்காந்தள் புத்தகப்பகுதி

## ஆசிரியர் குழு (Editorial Board)

**முனைவர் ஜெ. கவிதா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641004, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** kavithamahendiran1973@gmail.com

**முனைவர் தி. பரிமளா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
மதுரை – 625004, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** jeyamadhan05@gmail.com

**முனைவர் செ. சாந்தி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** shanthi_sf607@anjaconline.org

**முனைவர் ஆ. மகாலட்சுமி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001, தமிழ்நாடு, இந்தியா.

**மின்னஞ்சல்:** mahalakshmia83@gmail.com

**முனைவர் நா. குமாரி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி,
வேலூர்-6, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** jeevikumarioct31@gmail.com

**முனைவர் சீ. விமல்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மதுரைக்கல்லூரி
மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** vimal.vanji2015in@gmail.com

**முனைவர் ப. சசிரேகா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குரு நானக் கல்லூரி,
சென்னை – 600042, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல் முகவரி: sasirekatamil05@gmail.com

**முனைவர் த. மகேஸ்வரி**,
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர் – 626001. தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** dmakesh88@gmail.com

**முனைவர் மு. சுமதி**,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

ஸ்ரீ வித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** sumathisanjay67@gmail.com

**பொன். கனகா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வ. உ. சிதம்பரம் கல்லூரி,
தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** pon9514425928@gmail.com

## ஆசிரியர் குழு பணி விவரம்

இந்த சிறப்பிதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

## Editorial Work Flow Details

This Editorial committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

# மதிப்புரை

அன்பின்றி அகிலம் இயங்க முடியாது. இவ்வுலகின் ஒவ்வொரு உயிரிலும், அவற்றின் ஒவ்வொரு செயல்களிலும் அன்பு வெளிப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. தமிழ் இலக்கியங்களும் அன்பை வெளிப்படுத்துவதில் தவறவில்லை. அவை உணர்த்துகின்ற அன்பு சார் கருத்துக்களையும், செயல்களையும் எடுத்துரைப்பவையாக செங்காந்தள் - அன்பு எனும் இப்புத்தகப் பகுதி அமைந்துள்ளது.

பொன். கனகா அவர்களது ***தமிழிலக்கியங்களில் வெளிப்படும் அன்பெனும் அகவுணர்வு*** என்னும் இவ்வாராய்ச்சிக் கட்டுரையானது தலைப்போடு பொருந்திய முடிவுகளுடன் அமைந்துள்ளது. மேலும், அடிக்குறிப்புகளுடன் மையக்கருத்தானது இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையானது ஆய்விற்குத் தேவையான கேள்விகளை எழுப்பும் விதத்தில் அமைந்துள்ளது. கட்டுரையில் தெளிவான ஆய்வுக் குறிக்கோள்கள் இடம் பெற்றுள்ளன. உலா, குறவஞ்சி இலக்கியங்களில் இடம்பெறுகின்ற அன்பு சார்ந்த அகவுணர்வுகளைச் சான்று பாடல்களுடன் இவ்வாராய்ச்சிக் கட்டுரை விவரிக்கின்றது. கட்டுரையாளர் ஆய்விற்குத் தேவையான அடிக்குறிப்புகளை இணைத்துள்ளார். இக்கட்டுரையை மேற்கோண்டு எதிர்கால ஆய்வை மேற்கொள்ளலாம்.

***சங்க இலக்கிய விருந்தோம்பலில் அன்பு*** என்னும் ஆய்வுத் தலைப்பில் முனைவர் தி. கௌரி அவர்களது கட்டுரை, தமிழரின் உயரிய பண்பாடான விருந்தோம்பலில் வெளிப்படும் அன்பினைச் சங்க இலக்கியங்கள் வழி வெளிப்படுத்துகின்றது. அன்பின் வெளிப்பாடாக விருந்தோம்பல் நடைபெற்றதாலே அது தனிச்சிறப்புப் பெற்று விளங்கியுள்ளது என்ற முடிவினை ஆய்வு முன்வைப்பது சிறப்பிற்குரியது.

**இறை உணர்த்தும் அன்பு நெறி** எனும் தலைப்பிலான முனைவர் மு. ரா. மஜிதாபர்வின் அவர்களின் ஆய்வுக்கட்டுரை இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து எனும் மூன்று மதக்கொள்கைகளும் முன்வைக்கின்ற அன்பு எனும் கருத்தினை அழகுற முன் வைக்கின்றது. மக்கள் தம் வாழ்வில் அனைத்து உயிர்களிடத்தும் அன்பை வெளிப்படுத்தி மகிழ்வுற்று வாழ வேண்டும் என்ற நற்சிந்தனை நோக்கில் ஆய்வு இருப்பது பாராட்டுக்குரியது.

***பாரதியார் கவிதைகளில் அன்பு*** என்னும் தலைப்பில் செ. பவித்ரா அவர்கள் எழுதிய கட்டுரை, அனைத்திற்கும் ஆணி வேரான அன்பினைப் பாரதியார் தமது கவிதைகளில் வெளிப்படுத்துகின்ற பாங்கினை ஆராய்ந்து எடுத்து உரைக்கின்றது. குடும்பத்தில் அன்பினால் ஏற்படும் உறவுகளின் மகத்துவத்தைக் குறிப்பிடும் நோக்கில் ஆய்வு அமைந்துள்ளது.

# உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
| --- | --- | --- |
| 1. | சிற்றிலக்கியங்களில் வெளிப்படும் அன்பெனும் அகவுணர்வு<br>பொன். கனகா | 1 - 41 |
| 2. | சங்க இலக்கிய விருந்தோம்பலில் அன்பு<br>முனைவர் தி. கௌரி | 42 - 65 |
| 3. | இறை உணர்த்தும் அன்பு நெறி<br>முனைவர் மு. ரா. மஜிதா பர்வின் | 66 - 96 |
| 4. | பாரதியார் கவிதைகளில் அன்பு<br>செ. பவித்ரா<br>முனைவர் ஆ. மகாலட்சுமி | 97 - 125 |

# Love and Intution in Sittrilakkiyam

**Pon. Kanaga**, Assistant Professor of Tamil,
V. O. Chidambaram College, Thoothukkudi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-4571-443X**
**DOI: 10.5281/zenodo.8126847**

## Abstract

*From Sangam period to till present various Tamil Literatures are being created. as we all know SangamLiteratures are written with the theme of Love and Valor. After that, the themes of literature were got changed according to the needs and circumstances of our life. But whatever change may happened, the writings of Love was not being erased. Love iswritten in all literatures as a main theme or may be a describer of main theme. The famous Ninety-Six Literatures inTamil which were called as Sittrilakkiyangal too describes Love. some category of Literature among those Ninety-Six, expressed love in many different sensational way. This essay explores the Love Feelings which were described in those Sittrilakkiyangal.*

**Keywords:** Sitrilakkiyangal, Love, Kuravanji, Thoothu, Ulaa, Madal, Bharani.

## References

[1] Arunachala, M. *Prabandha Marabiyal*. Government Of Tamilnadu.
[2] Ilampooram Urai. *Tholkaapiyam Potulathikaram.* Tirunelveli Theninthiya Saiva Siththandha Noorpathippu Kazhagam, Chennai – 02.

[3] Govindha Muuthaliyar, K.R. *Pannirupaatiyal.* Tirunelveli Theninthiya Saiva Siththandha Noorpathippu Kazhagam, Tirunelveli -6.

[4] Gopalaiyar, T.V. *Ilakkana Vilakkam.* Jemini Printers, Kumbakonam.

[5] Sangupulavar, T. *Mathurai Chokkanadhar Tamizh Vidu Thoothu.* Tirunelveli Theninthiya Saiva Siththandha Noorpathippu Kazhagam, Tirunelveli -6.

[6] Sundar Kidambi. *Periya Thirumadal*. Pdf. www.Prapatti.Com.

[7] Jeyaraman,N.V. *Paatiyalum Ilakkiya Vagaimaigalum.* Ilakkiyap Pathippagam, Chennai-018.

[8] Selvaraj,N. *Irubathaam Nootranduch Sittrialkkiyangal.* Kaalchchuvadu Pathippagam, Nagercoil – 629 001.

[9] *Tamil Adon Dictionary*. Adon Publishing Group, Trivandanram.

[10] Puliyurkesigan. *Kalingaththupparani.* Rythym Book Distributors, Chennai – 15.

[11] Puliyurkesigan. *Thirukkutraala Kuravanji Moolamum Uuraium.* Saratha Printers,Chennai -14.

[12] Marx, Prof. *Sitrilakkiyangal Sila Kurippugal.* Silikkuyil Publishing, Kudanthai – 612 001.

[13] Murugesan.Kathi, Dr. *Ottakootharin Vikkirama Chola Ulaa Moolamum Uraium*. Saratha Printers, Chennai – 14.

[14] Vimalandham.Mathu, S. *Tamil Ilakkiya Varalaru.* Paari Nilaiyam, Chennai – 001.


 ISBN Number: 978-93-91115-20-3

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.


ISBN Number: 978-93-91115-20-3

# சிற்றிலக்கியங்களில் வெளிப்படும் அன்பெனும் அகவுணர்வு

**பொன். கனகா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வ. உ. சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-4571-443X**
**DOI: 10.5281/zenodo.8126847**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க காலம்தொட்டு, இக்காலம் வரை, தமிழில் பல்வேறு இலக்கியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன. சங்க இலக்கியத்தின் பாடுபொருளாக காதலும், வீரமும் அமைந்தன. பிற்காலத்தில் எழுந்த ஒவ்வொரு இலக்கியங்களும் அக்காலத் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப பாடுபொருளில் மாற்றம் பெற்றது. ஆனாலும், அக்காலம் முதல் இக்காலம் வரை இலக்கியங்களில் மையக் கருவாகவோ அல்லது கருவை மையமிட்ட காட்சியாகவோ, அகவுணர்வாகிய காதல் பாடப்பட்டு கொண்டிருக்கின்றன. அவ்வகையில் தமிழில் தொண்ணூற்று ஆறு வகை எனப் போற்றப்பெறுகின்ற சிற்றிலக்கியங்கள் சிலவற்றிலும், காதலன்பு பல்வேறு விதத்தில் வெளிப்படுவதை அறிய முடிகிறது.*

 **ISBN Number: 978-93-91115-20-3**

**குறிப்புச் சொற்கள்:** சிற்றிலக்கியங்கள், காதல், குறவஞ்சி, தூது, உலா, மடல், பரணி.

**முன்னுரை**

இலக்கியங்கள், வாசகர்களுக்கு அழகியல் உணர்வைத் தருவதோடு, அக்காலச் சமூகம், அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அவ்வகையில், சமகாலச் சிக்கல்களையும், எண்ணப் போக்குகளையும், எதிரொலித்துக் காட்டுவதில் சிற்றிலக்கியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அவை அகவுணர்வான காதலன்பினை வெளிப்படுத்துகின்றப் பாங்கினை ஆராய்ந்து வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சிற்றிலக்கியம் -சொல்லாடலும் விளக்கங்களும்**

சோழர் காலத்தில் தொடங்கி, அவர்களுக்குப் பிறகு தமிழகத்தை ஆண்ட நாயக்கர் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் எனப்படுகின்றன.

“சிற்றிலக்கியம்” என்ற சொல்லாட்சி வழக்கிற்கு வருவதற்கு முன்பு, “பிரபந்தம்” என்ற வடமொழிச் சொல்லாட்சி காணப்பட்டது. “பிரபந்தம்” என்ற சொல்லுக்கு, நன்கு கட்டப்பட்டது என்பது பொருளாகும். இடைக்காலத் தமிழக வரலாற்றில் பிரபந்தம் எனக்


**ISBN Number: 978-93-91115-20-3**

காணப்படும் சொல்லாட்சி, பின்னர் “சிற்றிலக்கியம்” என்றும், “சிறு காப்பியம்” என்றும் வழங்கலாயிற்று. தண்டியலங்காரம் காப்பியம் என்றும், பெருங்காப்பியம் என்றும் பாகுபடுத்தி இலக்கணம் கூறுகின்றது.

*“வடமொழி இலக்கணம் வழித் தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்தியதன் விளைவாக, ‘சிறுகாப்பியம்’ எனும் சொல் வழங்கப்பட்டுள்ளது. அதனால், சிற்றிலக்கியம் என்ற பெயர்ப் பொருத்தத்தை விடப் பரணி இலக்கியம், உலா இலக்கியம், பள்ளு இலக்கியம் எனச் சுட்டப் பெறுவது தகவுடையது”* என்ற கருத்தும் சிற்றிலக்கியச் சொல் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்தது என்று இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்கள் என்னும் நூலில் நா.செல்வராஜ் குறிப்பிடுகிறார்.

பிரபந்தம் என்பது தொண்ணூற்றாறு வகைப்பட்ட நூல் என்று அடோன் அகராதி பொருள் தருகிறது. மேலும், தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரையில் பிரபந்தம் பற்றி எடுத்துரைக்கையில், ரா. சீனிவாசன் *“காவியத்தின் ஒரு கூறாகிய ஒரு துறை மட்டும் பாடப்படுவது பிரபந்தம்”* என்றும், தா.ஈசுவரப்பிள்ளை *“குறைந்த எண்ணிக்கையுடைய பாடல்களைக் கொண்டும், எண் வகை யாப்பினாலும், குறிப்பிட்ட*


ISBN Number: 978-93-91115-20-3

*அமைப்பு நிலையினாலும் படைக்கப்பெறும் இலக்கிய வகையே சிற்றிலக்கியம்''* என்றும் எடுத்துரைக்கின்றனர்.

*''பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு நான்கும் உணர்த்தும். இவற்றில் ஒன்றோ பலவோ குறைந்துவரின் அவை சிற்றிலக்கியங்களாம். பின்னை நாளில் புற்றீசல் போன்று கிளர்ந்த இந்நூல்கள் 96 வகையாகக் கொண்டு இவற்றிற்கேற்ப இலக்கணம் வகுத்தனர்''* என்று மது.ச.விமலானந்தன் தமிழ் இலக்கிய வரலாறு நூலில் குறிப்பிடுகிறார்.

**வகைகள்**

சோழர் காலத்திற்குப் பின் நாடு தழுவிய இலக்கியங்கள் தோன்றாமல், வட்டார இலக்கியங்களான பிரபந்தங்கள் என்னும் சிற்றிலக்கியங்கள் உருவாக்கம் பெற்றன.இவை யாவும் வட்டார இலக்கியங்களாக இருந்தமையால் இவற்றைத் தொகுத்தவர்கள் இவற்றின் வகை, எண்ணிக்கை ஆகியவற்றைச் சொல்வதில் வேறுபடுகின்றனர்.

“யாப்பு என்னும் இலக்கணத்தாய் பெற்றெடுத்த சேய்'' என்று அழைக்கப்படும் பாட்டியல் நூல்கள், சிற்றிலக்கியப் பாடல்களின் எண்ணிக்கை, யாப்பு, வடிவம், பொருண்மை மற்றும் பாட்டுடைத்தலைவன், பாடுபொருள் பொருத்தம் ஆகியனவற்றை வரையறுத்துக் கூறும் சிறப்புடையன. அத்துடன் சிற்றிலக்கியப்

 ISBN Number: 978-93-91115-20-3

பாகுபாட்டினை வகைப்படுத்தி அறிவதற்குப் பாட்டியல் நூல்களின் இன்றியமையாத கருவிகளாகத் திகழ்கின்றன. பாட்டியல் நூல்கள், சிற்றிலக்கிய வகைகளை வகுத்து, வரையறைப்படுத்தி இலக்கணம் இயம்பியுள்ளன. பாட்டியல் நூல்களின் வரையறைப்படி, பொதுவாக சிற்றிலக்கியத்தின் வகைகள் 96 ஆகும். எனினும் ஒரு சில படைப்புகளில் இந்த எண்ணிக்கை வேறுபடுகின்றது. பன்னிரு பாட்டியலில் 62 சிற்றிலக்கியங்கள் மட்டும் இருப்பதாக கூறப்படுகின்றது. வெண்பா பாட்டியலில் 52 சிற்றிலக்கியங்கள் எனவும், நவநீதப் பாட்டியலில் 45 சிற்றிலக்கியங்கள் எனவும், சிதம்பரப் பாட்டியலில் 59 சிற்றிலக்கியங்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

**பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்**
**தொண்ணூற்றாறு என்னும் தொகையதாம் (செ. 1)**

என்று பிரபந்த மரபியல் வரையறுக்கின்றது.

*“கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரையிலும் சிற்றிலக்கிய எண்ணிக்கை 96 என ரையறுத்துக் கூறும் வழக்கு ஏற்படவில்லை. கி.பி. 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய “பிரபந்த மரபியல்” என்ற பாட்டியல் நூலே முதன் முதலாக 96 என்று எண்ணிக்கையை வரையறுத்துக் கூறுகின்றது”* என்று பாட்டியலும் இலக்கிய வகைமைகளும் எனும் நூல் குறிப்பிடுகின்றது. இதன்மூலம், காலத்தேவைக்கும், கற்பனைக்கும் ஏற்ப


ISBN Number: 978-93-91115-20-3

புதிய இலக்கிய வடிவங்கள் பல தோன்றி, சிற்றிலக்கிய வகையினைச் செழிக்கச் செய்துள்ளன என்னும் உண்மையினை உணர முடிகின்றது.

**பாடுபொருள்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் விழுமிய பொருள்களால் சிறந்து, அறம், பொருள், இன்பம், வீடு உணர்த்துவனவாய் அளவால் விரிந்து மக்கள் வாழ்வினை வளப்படுத்தத் தோன்றியவை பேரிலக்கியங்கள் எனப்படும். அவ்வகையில் அளவால் குறைந்து, கற்பனை மிகுந்து, கடவுளரையும், செல்வர்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு படிப்போரை இன்புறுத்தும் நோக்கத்தோடு எழுதப்பட்டவையே சிற்றிலக்கியங்கள் ஆகும்.

சிற்றிலக்கியத்தின் பொருண்மை குறித்து கு. முத்துராசன் குறிப்பிடுகையில், *“சிற்றிலக்கியங்கள் பெரும்பாலும் தெய்வங்களைக் குறித்தும், தெய்வ அடியவர்களைக் குறித்தும், சிறந்த அறிஞர்களைக் குறித்தும், கவிஞர்களைக் குறித்தும் மற்றும் பேரரசர், குறுநில மன்னர், பெருநிலக்கிழார் முதலானவர்களைக் குறித்தும், மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களை ஒட்டியும் எழுந்துள்ளன”* என்பார். மேற்கூறப்பெற்றக் கருத்தின் மூலம், அகமும் புறமுமாய் அமைந்த வாழ்வின் ஒரு பகுதியை விளக்கும் இலக்கியமே சிற்றிலக்கியம்

 ISBN Number: 978-93-91115-20-3

என்பதும், அதனுடைய பொருண்மை காலத்திற்கேற்ப வேறுபடும் என்ற கருத்தும் புலனாகின்றன.

**குறவஞ்சி இலக்கியம்**

சிற்றிலக்கிய வகைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்வது குறவஞ்சி என்ற இலக்கிய வகை ஆகும். குறவஞ்சி என்பது குற+வஞ்சி என்று பிரியும். குறவஞ்சி என்பது குறவர் குலத்தில் பிறந்த வஞ்சிக்கொடி போன்ற பெண் என்ற பொருளைத் தரும். இந்த நூலில் குறத்தி முதன்மை இடம் பெறுவதால், இந்த இலக்கிய வகை குறவஞ்சி என வழங்கப்படுகிறது எனலாம்.பாயிரம், பாட்டுடைத் தலைவன் உலா வருதல், உலாவைக் காணப் பெண்கள் வருதல், தலைவி பற்றிய செய்திகள், தலைவி தோழியைத் தூது அனுப்புதல், குறத்தி வருதல், குறி கூறுதல், குறவன் வருதல், வாழ்த்து, மங்கலம் என்ற அமைப்பு முறையில் குறவஞ்சி இலக்கியங்கள் பாடப்படுகின்றன.

பிற சிற்றிலக்கிய வகைகளைப் போலவே குறவஞ்சி இலக்கிய வகைக்கும் உரிய கருக்கள் தொல்காப்பியத்திலும் பிற இலக்கியங்களிலும் காணப் படுகின்றன. அவற்றிலிருந்து, குறவஞ்சி என்றதொரு தனிவகைமை, கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றியது. திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய குற்றாலக் குறவஞ்சி முதல் குறவஞ்சி நூல் ஆகும்.

 ISBN Number: 978-93-91115-20-3

## *குற்றாலக் குறவஞ்சி*

குறவஞ்சி நாடகம் என்று போற்றப்படும் இந்நூல் வடகரை அரசனான சின்னணஞ்சாத் தேவரின் அவைப்புலவராக விளங்கிய திரிகூடராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. திருக்குற்றாலநாதாரின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்ட இந்நூல் அன்றைய மதுரை மன்னனான முத்துவிஜரங்க சொக்கநாத நாயக்கரின் பாராட்டையும் பரிசையும் பெற்றது.

குறவஞ்சி நாடகத்திற்கென வரையறை செய்யப்பட்ட கதை அமைப்போடு இந்நூலும் விளங்குகிறது. குற்றாலநாதரின் திருவுலா எழுச்சியைக் குறித்து முன்னர் கட்டியங்காரன் கூறுகிறான். திருவுலா தொடங்குகிறது மூவர் தமிழும் நான்மறைகள் முழங்க குற்றலாநாதர் வீதியில் உலா வருகிறார். குற்றாலநாதாரின் திருவுலாவைக் காண பெண்கள் எழுந்து வருகின்றனர். அப்பொழுது பந்து ஆடிக்கொண்டிருந்த வசந்தவல்லி (கதைத்தலைவி) என்பவளும் திருவுலா காண வருகிறாள். தோழியின் வாயிலாக இறைவனைப் பற்றி அறிந்த வசந்தவல்லி இறைவன் மீது காதல்கொண்டு தோழியைத் தூதனுப்புகிறாள். இந்நிலையில் குறிசொல்லும் குறத்தி தெருவழியே வருகிறாள்.


**ISBN Number: 978-93-91115-20-3**

தோழி அவளைக் குறிசொல்ல அழைத்தவுடன் குறப்பெண் தன்நாட்டு மலைவளமும் தொழில்வளமும் சிறப்பாக எடுத்துக்கூறுகிறாள். பின் வசந்தவல்லி கையைப் பார்த்து அவள் குற்றாலநாதர் மீது காதல் கொண்டுள்ள செய்தியையும், (தலைவனின்) குற்றாலநாதரின் புகழ்பற்றியும் எடுத்துச்சொல்லி வசந்தவல்லியின் எண்ணம் நிறைவேறும் என்று குறிசொல்லி பரிசு பெறுகிறாள் குறத்தி சிங்கி. அவள் கணவன் சிங்கன், அவளைக் காணத் தேடிவருகிறான். குறத்தியைக் கண்ட சிங்கனிடம் குறத்தி நடந்ததைச் சொல்ல இருவரும் குற்றாலநாதரைப் பாடி இன்பம் அடைவதாக நூல் நிறைவுறுகிறது.

**வசந்தவல்லியின் காதலுணர்வு**

குற்றாலத்துச் சிவன் தெருவில் உலா வந்து கொண் டிருக்கின்றார். அவரைக் காணக் கன்னியர் பலர் கடிதின் ஓடுகின்றனர். இந்நிலையில், பந்தாடிக்கொண்டிருந்த வசந்த வல்லி என்னும் தலைவியும் ஓடினாள். குற்றால நாதரிடம் தன் உள்ளத்தை பறிகொடுக்கின்றாள். அவள் இதுவரை உணராத உணர்வை அடைகிறாள். இறைவன் மீது கொண்ட காதலால் ஏங்கித் தவிக்கிறாள் என்பதை,

**வாகனைக் கண்டு உருகுதையோயொரு**
**மயக்கமதாய் வருகுது ஐயோ**

 ISBN Number: 978-93-91115-20-3

**மோகம் என்பது இதுதானோ – இதை முன்னமே**
**நான் அறிவேனோ?**
**ஆகம் எல்லாம் பசந்தேனே - பெற்றஅன்னை**
**சொல்லும் கசந்தேனே**
**தாகம் அன்றிப் பூணேனே – கையில்**
**சரிவளையும் காணேனே (குற். குற., பா. 26: 2)**

என்ற குற்றாலக் குறவஞ்சி வரிகள் காட்சிப் படுத்துகின்றன.

உள்ளம் அவள்பால் இல்லாததால் உணவிழந்தாள், உடை சோர்ந்தாள், உறக்கம் விட்டாள். உரை தடுமாறுகின்றது. உடம்பைச் சுட்டெரிக்கின்றது காதல் தீ. அவ்வெப்பத்தைப் போக்க எண்ணிய தோழிகள், வசந்தவல்லியை மேல்மாடியில் நிலா முற்றத்திற்குக் கொண்டு போனார்கள். எல்லார்க்கும் இன்பம் தருகின்ற நிலா, வசந்தவல்லிக்கு மட்டும் வெப்பம் வீசுபவனாக வெளிப்படுகிறான்.

**தண்ணமுதுடன்பிறந்தாய் வெண்ணிலாவே-**
**அந்தத்**
**தண்ணளியை ஏன் மறந்தாய் வெண்ணிலாவே**
**பெண்ணுடன் பிறந்ததுண்டே வெண்ணிலாவே -**
**என்றன்**
**பெண்மை கண்டும் காயலாமோ**
**வெண்ணிலாவுமே (குற். குற., பா. 23: 1)**

 **ISBN Number: 978-93-91115-20-3**

என்ற வரிகளில், வெப்பம் தாங்கமுடியாத வசந்தவல்லி அந்த வெண்ணிலாவை நோக்கி வெந்து விளம்பத் தொடங்குகின்றாள். நிலவே! கண்ணிலிருந்து நெருப்பைக் கக்கும் அந்தச் சிவன் முடியில் சேர்ந்து சேர்ந்து, நீயும் நெருப்பை வீசக் கற்றுக்கொண்டாயோ என்றும், தண்ணிய அமிழ்தத்தொடு நீயும் பிறந்தாய் என்றால், நீ மட்டும் ஏன் அந்தத் தண்மையை மறந்தாயென்றும், திருமகளோடு பிறந்த நீ, ஒரு பெண்ணாகிய என் மேல் ஏன் இரக்கம் கொள்ளாமல் வெப்பத்தை வீசுகின்றாய் என்றும் வசந்திவல்லி புலம்புகிறாள்.

**மோகன் வரக்காணேன் என்றால்வெண்ணிலாவே- இந்த**
**வேகம் உனக் கானதென்ன வெண்ணிலாவே**

**(குற்.குற., பா. 23: 3 (3-4))**

**நாகம் என்றே எண்ணவேண்டாம் வெண்ணிலாவே - இது**
**வாகு குழல் பின்னல் கண்டாய் வெண்ணிலாவே...**

**(குற். குற., பா. 23: 4 (1-2))**

என்ற வரிகளில், “இதோ என்னுடைய பின்னல் சடை. நீ இந்தச் சடையைப் பார்த்ததும் கிரகண காலத்தில் உன்னைப் பிடிக்கின்ற நாகப் பாம்பின் நடு உடல் என்றும், தலையைப் பார்த்ததும் பாம்பு படமெடுத்து நிற்கின்றது என்றும் எண்ணிக்கொண்டாய் போலும். உன்

 ISBN Number: 978-93-91115-20-3

எதிரியாகிய பாம்பை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன் என்ற காரணத்தால் என்னை எரிக்கின்றாயா அல்லது வசந்தவல்லியின் முகமதியை அந்தப் பாம்பு விழுங்கப் பார்க்கின்றது. ஆதலின் அந்தப் பாம்பை இப்போதே சுட்டெரித்து விடவேண்டும் என்றெண்ணி அந்தப் பாம்பைச் சுடுகின்றாயா? ஐயோ, ஒன்றும் புரியவில்லையே! இது பாம்பன்று பின்னல் சடை! இனிமேலாயினும் எரிப்பதை நிறுத்து இந்த மோகினி தன்னுடைய மோகன் வரவில்லையே என்று வருந்து கின்றாள்.உனக்கு ஏன் இந்த வேகம் வெண்ணிலாவே என்று விளம்புகிறாள்.

பேடியைப்போல ஒரு பெண்ணின் மேல் வந்து காய்கின்றாயே! இதுதானா சூரத்தனம்? வெட்கத்துடன் வீரமும் இருக்குமானால் அந்தச் சிவன் முன்பு சென்று காயக்கூடாதா?" என்று வருந்திப் புலம்புகிறாள் வசந்தவல்லி. பின்னர் அவள் மன்மதனை விளித்து, "ஏ மன்மதா! அந்தப் பாவி நிலா காய்கிறது போதாதென்று இந்தத் தென்றல் காற்று என்னும் புலியும் பாய்கிறது. ஒன்றுக்கு இரண்டு உபத்திரவத்துக்கு மூன்று என்ற முறையில், பற்றாக்குறைக்கு நீயும் ஏன் என்னை இவ்வாறு கொல்லாது கொல்கிறாய்? உன் கைவரிசையை அந்தக் குற்றால நாதரிடம் போய்க் காண்பி பார்க்கலாம்! ஏன்? அவர் நெற்றிக் கண்ணால் சுட்டெரித்து விடுவார்


ISBN Number: 978-93-91115-20-3

என்று அஞ்சுகின்றாயா? ஒரு பெண்ணிடம் போர்தொடுக்கும் நீயும் ஓர் ஆண் மகனா? பேடியே போதாய்!” என்று ஏசிப் பேசுகிறாள்.

மேற்கண்ட பாடல்கள் வழி, வசந்தவல்லியின் காதல் உணர்வினை அறிய முடிகிறது. அவள் குற்றால நாதர் மீது கொண்ட காதலால், இயற்கையின் நிகழ்வான நிலவும், தென்றல் காற்றும்கூட அவளுக்கு வெறுக்கத்தக்கனவாகவும் வெப்பம் மிகுந்தவையாகவும் மாறியமையை உணரமுடிகிறது. சாதாரண மானுடர் அல்லது இறைவன் மீது காதல் கொண்டு, அந்த அன்பிற்காக ஏங்கித் தவிக்கும் ஒரு பெண்ணின் காதலுணர்வினை குற்றாலக் குறவஞ்சியில் காண முடிகிறது.

**தூது இலக்கியம்**

பொருள் அடிப்படையில் அமையும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாக தூது இலக்கியம் விளங்குகின்றது. ஒருவர் மற்றொருவரிடத்து மக்களையோ அல்லது அஃறிணைப் பொருள்களையோ தூது அனுப்புவதாக அமைந்த இலக்கியமமானதால், இதற்குத் தூது இலக்கியம் என்ற பெயர் ஏற்பட்டது. பல்வேறு இலக்கிய வகைகளுக்கு உரிய இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் தூது இலக்கியத்தின் இலக்கணத்தையும் கூறுகின்றன. தூது இலக்கிய வகைமையும் இலக்கணம்,

 **ISBN Number: 978-93-91115-20-3**

இலக்கியம் ஆகிய நூல்களில் காணப்படும் கருக்களிலிருந்து வளர்ச்சி அடைந்து தனி இலக்கிய வகையாக தோன்றியுள்ளது. கல்வி கற்கும் பொருட்டு செல்லுதல், மன்னனின் பகைவர்கள் மேல் போர் தொடுத்து செல்லுதல், தூது செல்லுதல் ஆகிய காரணங்களுக்காக தலைவன் செல்வான். அப்போது தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே பிரிவு ஏற்படும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். அப்பொழுது தூது செல்லுதல் பற்றி குறிப்பு உள்ளது. தூதாகச் செல்வதற்கு உரியவர்களைத் தொல்காப்பியர் வாயில்கள் என்று குறிப்பிடுகிறார்.

தலைவன் பெருமைகள் கூறுதல், தூது அனுப்பும் தலைவியின் நிலை கூறுதல், தூதுப் பொருளின் பெருமைகளைக் கூறுதல், தூதுப்பொருளிடம் அறிவுரைகள் கூறுதல், தூது வேண்டுதல் என்ற அமைப்பு முறையில் தூது இலக்கியங்கள் அமைகின்றன.

தூது இலக்கிய வகையின் முதல் நூல் **நெஞ்சுவிடு தூது** என்ற நூல் ஆகும். இதனை இயற்றியவர் உமாபதி சிவாச்சாரியர் ஆவார். இதன் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு ஆகும். இந்நூலைத் தொடர்ந்து பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. இப்போது முந்நூற்றுக்கும் மேற்பட்ட தூது நூல்கள் உள்ளன. அவற்றுள் தமிழ்விடுதூது, கிள்ளைவிடுதூது, அன்னம்விடு தூது,

 ISBN Number: 978-93-91115-20-3

மேகவிடுதூது முதலானவை புகழ்பெற்ற தூது இலக்கியமாகும்.

### *தமிழ்விடு தூது*

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய தூது இலக்கியத்தை, தலைவன் மேல் காதல் கொண்ட தலைவி தன் காதல் நோயின் துன்பத்தைக் காதலனுக்கு எடுத்துக்கூறி ''மாலை வாங்கி வா'' என்றும், ''தூது சொல்லி வா'' என்றும் உயர்திணைப் பொருள்களையோ, அஃறிணைப் பொருள்களையோ தூது விடுவதாகப் புலவர்கள் பாடியுள்ளனர். தலைவன் தூது விடுத்ததாக, விறலி விடு தூது என்ற ஒரு நூல் மட்டுமே காணப்படுகிறது. தலைவி விடுத்த தூது நூல்களே பெரும்பாலும் காணக் கிடைக்கின்றன.

தமிழ்விடு தூது என்ற நூல், மதுரையில் எழுந்தருளி உள்ள சோமசுந்தரக் கடவுளிடம் ஒரு பெண் தன் காதல் துன்பத்தைக் கூறித் தமிழ்மொழியைத் தூது அனுப்பியதாக அமைந்துள்ளது. தமிழ் விடு தூது நூலில் தூது பெறுபவர் சோமசுந்தரக் கடவுள். தூது விடுபவர் ஒரு பெண். தூதாக அனுப்பப்படுவது தமிழ்மொழி. இரண்டு இரண்டு பூக்களை வைத்து தொடுக்கப்படும் மாலை கண்ணி. அதே போல் இரண்டு இரண்டு அடிகளை வைத்து தொடுக்கப்படும் செய்யுள் கண்ணி ஆகும். தமிழ்


ISBN Number: 978-93-91115-20-3

விடு தூது நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. இந்த நூலை இயற்றிய ஆசிரியரின் பெயர் தெரியவில்லை.

தூது செல்லும் தமிழ் மொழியின் பெருமைகளைக் கூறுதல், பிற பொருட்களைத் தூதாக அனுப்பாமல் தமிழை தேர்ந்தெடுத்ததற்கான காரணங்களை கூறுதல், தூது பெறும் தலைவன் சோமசுந்தரக் கடவுளைப் புகழ்ந்து கூறுதல், தலைவி தன் துயரைக் கூறுதல், தலைவி தமிழிடம் தன் தூதுச் செய்தியைக் கூறித் தூது வேண்டுதல் என்ற பொருண்மை அடிப்படையில் தமிழ்விடு தூது அமைந்துள்ளது.

**தலைவியின் பேரின்பக் காதல்**

தூது அனுப்புவோர், தூதுப்பொருளிடம் அதன் பெருமைகளைக் கூறிப், பின்னர் தூது செல்ல வேண்டுவதை, எல்லாத் தூது நூல்களிலும் காணலாம். இந்நூலில் தூது விடும் தலைவி, தூதுப் பொருளான தமிழின் பல்வேறு பெருமைகளைப் புகழ்ந்து கூறு தன்னுடைய துயரைக் களைய தூது செல்லுமாறு வேண்டுகின்றாள்.

பிற பொருட்கள் தூது அனுப்ப ஏற்றவை அல்ல எனக் கூறித், தலைவி தமிழிடம் வேண்டுகின்றாள். என்னுடைய துன்பங்களை நீ கண்டு இரங்குவதுதான் நீதியாகும் என்கிறாள். சிவபெருமானைப் பரவை நாச்சியாரிடம், சுந்தரருக்காகத் தூது அனுப்பி வைத்தாய்.


**ISBN Number: 978-93-91115-20-3**





எனினும் உன்னிடம் தூது சொல்லி வா என்பேன் என்று தலைவி தன் எண்ணத்தைக் கூறுகின்றாள்.

**பெண்கள்எல் லாம்வாழப் பிறந்தமையால் என்மனத்தில்**

**புண்கள்எல் லாம்ஆறப் புரிகண்டாய் (கண்ணி. 106)**

என்ற வரிகளில், பெண்கள் எல்லாரும் வாழப் பிறந்த நீ, என் மனத்தின் துன்பங்களை எல்லாம் அகற்ற வழி செய்வாயாக என வேண்டுகின்றாள்.

19291 என்ற எண்ணிக்கையைக் கொண்ட செய்யுள் தொடைகளை உடைய நீ, சொக்க நாதரிடம் இருந்து எனக்கு ஒரு மாலை வாங்கி வந்து உதவ மாட்டாயோ? என்ற தன் எண்ணைத்தை,

**பண்ணியபத் தொன்பதி னாயிரத்து இருநூற்று**

**எண்ணியதொண்ணூற்றுஒன்று**

**எனும்தொடையாய்-நண்ணி**

**ஒருதொடை வாங்கி உதவாயோ... (கண்ணி. 113-114)**

மேற்கண்ட வரிகளில் வெளிப்படுத்துகின்றாள்.

திருக்கொள்ளம் பூதூர் வெள்ளத்தை நீ கடந்தாய். உன்னை நான் வணங்கினேன். நான் என் காமம் ஆகிய வெள்ளத்தைக் கடக்கும்படி நீ செய்யமாட்டாயா? சைனர்களைக் கழு ஏறுமாறு நீ செய்தாய். என்னை


ISBN Number: 978-93-91115-20-3

வருத்தும் மன்மதனையும் அவ்வாறு செய்ய மாட்டாயா? பாண்டிய மன்னனின் கூனை நிமிர்த்தாய். மன்மதனின் கரும்புவில்லின் கூனை நிமிர்த்த மாட்டாயா? பாண்டிய மன்னனின் வெப்பு நோயை நீக்கினாய். என் காம வெப்பத்தை நீக்கமாட்டாயா?

**மாறிட்ட சாக்கியரை வன் கழுவேறச் செய்தாய்**
**சீறிட்ட வேலையது செய்யாயோ – நீறிட்டே**
**அங்கரும்பின் கூனொழித்தா யன்றுவழு திக்குமதன்**
**செங்கரும்பின் கூனொழியச் செய்யாயோ (கண்ணி. 155-156)**

சமணர்கள் இட்ட நஞ்சை அமுதம் ஆக்கினாய். நீ என் உணவாகிய நஞ்சை அமுதம் ஆக்க மாட்டாயோ? தீயில் இருந்த போதும் வேகாது இருந்தாய். என்னைக் காமம் ஆகிய தீயில் வேகாமல் காக்கமாட்டாயோ? அப்பரைக் கடலில் மூழ்காதபடி காத்தாய். என்னைக் கடல் வருத்தாமல் இருக்கச் செய்ய மாட்டாயோ? ஆண் பனையைப் பெண் பனை ஆக்கினாய். அந்தப் பனையில் இருந்து என்னை வருத்தும் அன்றில் பறவையை வேறு பறவை ஆக்கமாட்டாயோ? இறந்த பெண்ணின் எலும்பைப் பூம்பாவை ஆக்கினாய். அழகு இழந்த என்னையும் அழகு உடையவளாக மாற்ற மாட்டாயோ?

 ISBN Number: 978-93-91115-20-3

என்று தலைவி தூது செல்லுமாறு தமிழிடம் வேண்டுகிறாள்.

இதன்மூலம் தமிழ்விடு தூது என்ற நூலில், தமிழின் பெருமை பாடப்படும் போதும், ஊடே காதல் உணர்வால், தலைவிக்கு ஏற்பட்ட வருத்தமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. தமிழினைத் தூது செல்லுமாறு வேண்டியதன் நோக்கமே தலைவன்பால் தலைவிகொண்ட காதலுணர்வு என்பது ஈங்கு கவனிக்கத்தக்கது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியவர்களின் செயல்களை ஒப்பிட்டுத், தலைவி தன் நிலையை எடுத்தியம்புவதைக் காண முடிகிறது.

**உலா இலக்கியம்**

உலா என்னும் சிற்றிலக்கியம் பாட்டுடைத் தலைவன் உலா வரும்போது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் எழுவகைப் பருவ மகளிர் காதல் கொண்டு மயங்கி நிற்பதாகப் பாடப்படுவது ஆகும். இது பரத்தையர் இயல்பு; குலமகளிர் இயல்பன்று என்று கூறுவாரும் உளர். உலா இலக்கியம் கலிவெண்பாவால் பாடப்பெறுகின்றது.

**ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப (புறத்திணை. 83)** எனும் தொல்காப்பிய நூற்பா உலாவின் தோற்ற நிலை என்பர். பெருங்காப்பியங்களில்


ISBN Number: 978-93-91115-20-3

பாட்டுடைத்தலைவன் உலா வருதல் சுருக்கமாகக் கூறப்படும்.

உலா இலக்கியத்தின் முற்பகுதியில் உலாவரும் பாட்டுடைத் தலைவனது குலம், குடிப்பிறப்பு, மரபு, அழகு, கொடை, அணி அணியும் முறை, அறிவு, ஆண்மை, அன்பு, நகர வரவேற்பு, களிறு ஊர்தல் ஆகியன கூறப்பெறும். பிற்பகுதியில் அவனைக் கண்ட பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற ஏழுவகைப் பருவ மகளிரின் அழகும், பண்பும், காதலும், மயங்கும் முறையும் எடுத்துரைக்கப்படும். கடவுள், அரசன், வள்ளல், தலைவன் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடும் மரபினை உலா இலக்கியத்தில் காணலாம்.

ஆதி உலா, தெய்வீக உலா எனச் சிறப்பிக்கப்பெறும் சேரமான் பெருமாள் நாயனார் செய்த திருக்கைலாய ஞான உலாவே முதல் உலாவாகும். நம்பியாண்டார் நம்பிகளின் ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஒட்டக்கூத்தரின் மூவருலா, இரட்டைப்புலவர்களின் ஏகாம்பர நாதர் உலா, திரிகூடராசப்பக்கவிராயரின் திருக்குற்றால நாதர் உலா, முதலியவை பின்னாளில் தோன்றி புகழ்பெற்றவை.


ISBN Number: 978-93-91115-20-3

## *விக்கிரமச் சோழ உலா*

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் உலாப் பாடுவதில் வல்லவரான ஒட்டக்கூத்தரால் மூவருலா இயற்றப்பட்டது. விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராசராச சோழன் ஆகிய மூன்று சோழ மன்னர்களையும் தலைவர்களாகக் கொண்டு தனித்தனியாகப் பாடப்பெற்ற உலா நூல்கள் மூன்றையும் இணைத்து மூவருலா என வழங்கினர்.

மூவருலாவில் முதற்கண் நிற்பது விக்கிரமச் சோழன் உலா. இந்நூலில், சோழர் குலம் தோன்றிய காலம் தொட்டு வழிவழியாக ஆண்ட மன்னர்களில் சிறப்பும், செயலும் கூறப்பட்டு, அதனைத் தொடர்ந்து விக்கிரம சோழனின் பிறப்பு, சிறப்பு, ஆட்சி புரியும் திறன் மற்றும் பிறவும் கூறப்படுகின்றன. பின்னர், பள்ளியெழுச்சி, நீராடல், தெய்வ வணக்கம், கொடை, அணி புனைதல், உலாவிற்குப் புறப்படல், பட்டத்து யானையின் சிறப்பு ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. அதனடுத்து, ஏழு பருவப் பெண்களின் வனப்பும் பண்பும் செயல்களும் காதலும் மயக்கமும் முறையே கூறப்படுகின்றன. பின் தோழியர் பலர் ஏங்கி நின்று தம் தலைவியைப் புரக்குமாறு வேண்ட, விக்கிரம சோழன் உலாப் போந்தான் என விக்கிரமச் சோழன் உலா நிறைவு பெறுகிறது.

 **ISBN Number: 978-93-91115-20-3**

**பருவ மகளிரின் அகவுணர்வு**

விக்கிரம சோழன் உலா வரும் அழகைக் காண வந்த மகளிர் கூட்டம் தேவருலக மகளிர் போலவும், நாகருலக மகளிர் போலவும், விஞ்சையர் உலக மகளிர் போலவும் தோன்றினர் என்கிறார் ஒட்டக்கூத்தர். உலாவினைக் கண்ட ஒவ்வொரு பருவ மகளிரின் உள்ளத்திலும் காதலுணர்வு வெளிப்பட்டுள்ளது.

**கண்ணு மனமுங் கழுநீர்க் குலமுழுதும்**
**நண்ணுந் தொடையன்மே னாட்செய்ய – உண்ணேகிழா**
**வம்மின்க என்னைமீர் மாலை யிதுவாங்கித்**
**தம்மின்க ளென்றுரைப்பத் தாயாரும் – அம்மே**
**(விக். உ. 129-300)**

என்ற வரிகள், பிறை போன்ற பேதைப்பெண் இளமையான அன்னப்பெடை போன்றவள், இளங்கொம்பு போன்றவள் விக்கிரம சோழன் அணிந்திருந்த செங்கழுநீர் மாலையையே பார்த்தாள். வேறொன்றையும் பார்க்கவில்லை. அந்த மாலையை வாங்கி எனக்குத் தாருங்கள் என்று தாய்மாரிடம் கூறியதாகக் குறிப்பிடுகின்றது.

பெதும்பைப் பருவத்தாள் ஒருத்தி, வேய்ங்குழல் போன்ற இனிமையான சொற்களைப் பேசக்கூடியவள் தான் கண்ட கனவினைப் பேசுகின்றாள். ஓர்

 **ISBN Number: 978-93-91115-20-3**

இளம்பூங்கொடி செழித்த கோங்க மரத்தின் ஒரு கொம்பினைப் பற்றி இணைந்திருப்பது கண்டு மகிழ்வுற்றேன் என்கிறாள்.

> **கண்ட கண் வாங்காள் தொழமுகிழ்ந்த கைவிடான்**
> **மண்டு மனமீட்கு மாறறியாள் (விக். உ. 159)**

என்ற வரிகள், பெதும்பைப் பெண்ணின் உணர்வினைக் காட்சிப்படுத்துகிறது.

செருக்குற்ற அன்னம் போன்ற மங்கைப்பருவப் பெண்ணொருத்தி விக்கிரம சோழனைப் பெதும்பைப் பருவத்தில் கண்டு காதல் கொள்கிறாள். அவன் பாதம் முதலாகத் தங்க முடி புனைந்த உச்சி வரையிலும் மனத்திலே குறித்தெழுதிப் பின் படத்தில் எழுதிப் பகல் முழுதும் பார்த்திருந்தவள்,

> **பண்டறியு முன்னைப் பருவத் துருவத்துள்**
> **கண்டறியு மவ்வடிவு காண்கிலேன் – பண்டறியும்**
> **முன்னை வடிவு மிழந்தேன் முகநோக்கி**
> **என்னை யறிகலன்யா னென்செய்கேன் (விக். உ. 179 - 180)**

இப்பொழுது மன்னனைக் காணத் தன்னை அலங்கரித்துக்கொண்டு கிளம்புகிறாள்., இப்பொழுது தன்னை அறிவானோ என்று அவளது கண்ணும் மனமும் களித்து நின்றதாகப் பதிவு செய்கிறது.

 ISBN Number: 978-93-91115-20-3

வெல்லப்பாகு போன்ற இனிய சொல்லையுடைய மடந்தைப் பருவப்பெண் பாங்கியிடம் பந்தயம் கட்டிப் பல பந்துகளைக் கையிலெடுத்தாள். ஆட்டத்தில் பாங்கியை வென்றாள். உடனே சூரியன் போன்ற சோழன் மாலையை வாங்கித்தா என்று அவளை வருத்தி நின்றதாகவும், மான்விழி போன்ற கண்களை உடைய, அரிவைப் பருவமுடைய ஒருத்தி, முன்னொரு நாள் தெருவில் பவனி வந்த விக்கிரம சோழன்பால் காதல் கொண்டவள் இப்போது மனம் உருகி நின்று, அன்னங்கள், குருகுகள், குயிலினங்கள், மயிலினங்கள், வண்டுகள் ஆகியவற்றைப் பார்த்து, சோழனை அடைய நீங்கள் எனக்கு உதவி செய்யமாட்டீரோ என்று மயங்கிக்கூறி நின்றதாகவும் சோழனுலா எடுத்தியம்புகிறது.

மயக்கம் கொடுக்கும் தேன் போன்ற தெரிவைப்பெண் ஒருத்தி பாணனை நோக்கி, சோழனது நாடு, ஆத்திமாலை, புலிக்கொடி, மற்றும் காவிரியாற்றினைப் பற்றிப்பாடுக என்கிறாள்.

**புலருந் தனையும் புலம்பினா ளாங்குப்**
**பலரும் பணிந்து பரவ (விக். உ. 285)**

என்ற வரிகள், பாணன் யாழிலிருந்து எழுந்த இசைப்பாடல்கள் இனிமையாக ஒலிக்க, காமனுடைய


ISBN Number: 978-93-91115-20-3

அம்புகள் அவளைத் துன்புறுத்த, விடியுமளவும் காதலால் பலபடப் புலம்பி நின்றதைக் காட்சிப்படுத்துகிறது.

வில்லை நெற்றியாகக் கொண்ட பேரிளம்பெண் கமழும் பூமாலை பல அணிந்து, கள்ளுண்டு களித்துக் கனவிலே சோழனைக் கண்டு மகிழ்ந்தவள், கனவை நனவாகப் பலரிடம் பேசிக் கொண்டிருக்கிறாள். இதன்மூலம், விக்கிரமச் சோழ உலாவில், தலைவனாகிய சோழன் உலாவர ஏழுவகைப் பருவ மகளிரும் அவனைக் கண்டு, காதலுற்று அவனது அன்பினைப் பெற ஏங்கியமைப் புலப்படுகின்றது. ஏழுவகைப் பருவ மகளிரும் தலைவன்மீது காதலோடு கூடிய காமவுணர்வினையும் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. பெண்களின் அனைத்துவிதமான அகவுணர்வினையும் வெளிக்கொணர்வதாக விக்கிரமச் சோழவுலா அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

**மடல் இலக்கியம்**

மடல் இலக்கியம் அகப்பொருள் சார்ந்த சிற்றிலக்கிய வகை ஆகும். இது காதல் குறித்த ஓர் இலக்கியமாக அமைகின்றது. மடல் ஏறுதல் என்ற பொருளை விளக்கும் நிலையில் அமையும் இலக்கிய வகை ஆதலால் இது மடல் இலக்கியம் எனப்படுகிறது என்று பொதுவாகக் கூறலாம். அகப்பொருள் கூறுகளில் ஒன்று மடல் ஏறுதல் என்பது ஆகும்.


ISBN Number: 978-93-91115-20-3

**கேடும் பீடும் கூறலும் தோழி**

**நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி**

**மடல் மா கூறும் இடனுமார் உண்டே (களவியல். 11)**

தலைவன் தலைவியிடம் காதல் கொள்கிறான். தலைவியைத் தன்னுடன் கூட்டுவிக்கும்படி தலைவன் தோழியிடம் வேண்டுகிறான். ஆனால் தலைவனால் தலைவியை அடைய முடியவில்லை. இதனால் தலைவன் மனம் வருந்துகிறான். இறுதியில் தலைவியை அடைவதற்காகத் தலைவன் மடல் ஏறப் போவதாகத் தோழியிடம் கூறுகின்றான், என்று தொல்காப்பியர் பொருள் அதிகாரத்தில் மடல் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

பல்வேறு இலக்கணம் மற்றும் இலக்கிய நூல்களிலும் காணப்படுகின்ற மடல் ஏறுதல் பற்றிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு மடல் என்ற தனியான ஓர் இலக்கிய வகை தோன்றியது எனலாம். தமிழ்மொழியில் முதன் முதலில் தோன்றிய மடல் இலக்கியங்களாக திருமங்கையாழ்வார் பாடிய சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய நூல்கள் திகழ்கின்றன.

**பெரிய திருமடல்**

மடல்ஏறுதல் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரியது. பெண்கள் மடல் ஏற மாட்டார்கள் என்பது மரபு


ISBN Number: 978-93-91115-20-3

ஆகும். மடல் இலக்கிய மரபில் மாற்றம் ஏற்பட்டுள்ளமையைத் திருமங்கை ஆழ்வார் இயற்றிய சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய நூல்களில் காணலாம். இந்நூல்களில் தலைவனை அடையத் தலைவி மடல் ஏறப் போவதாகக் கூறுகிறாள்.

இறைவன் மீது எல்லை இல்லாத காதல் கொண்டுள்ளாள் தலைவி. தலைவனாகிய இறைவனை அடைவதற்குரிய முயற்சியாகத் தலைவி மடல் ஏறுவேன் என்று கூறுகின்றாள். பெரிய திருமடல் இவ்வகையில் அமைந்த நூலாகும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் உறுதிப் பொருள்கள் ஆகும். இவற்றுள் இன்பமே சிறந்தது என்ற கருத்து அமையப் பாடப்படுவது மடல் இலக்கியத்தின் பண்புகளுள் ஒன்று ஆகும். பெரிய திருமடலிலும் இன்பத்தின் சிறப்புகள் கூறப்படுகின்றன. மடல் ஏறுவதாகக் கூறும் பெண், இன்பத்தின் சிறப்புகளைக் கூறுவதாக அமைந்துள்ளது. இன்பத்தின் பெருமைகளைக் கூறுவதற்கு முன்பு அறம், பொருள், வீடு ஆகியவை பற்றியும் இந்த நூல் குறிப்பிடுகிறது.

**தலைவியின் பெருங்காதல்**

தலைவி நான்கு பொருள்களில் இன்பமே சிறந்தது என்பதை விளக்குவதாகக் காட்டுகின்றாள். காதலின் எல்லையை மீறாதவர்கள் பொதிய மலையின்

 ISBN Number: 978-93-91115-20-3

சந்தனக் குழம்பின் தன்மை, புல்லாங்குழலின் இனிமையான ஓசை ஆகியவற்றை அறியாதவர்கள் ஆவர் என்று தலைவி குறிப்பிடுகின்றாள். இதற்குப் பல்வேறு சான்றுகளையும் தருகின்றாள்.

திருமாலைக் கண்ட தலைவி, அவன் பக்கத்தில் திருமகள் நிற்பதைக் கூடக் காணவில்லை. திருமாலின் அழகில் மயங்கி,

**என்னுடைய நெஞ்சும் அறிவும் இனவளையும்**
**பொன்இயலும் மேகலையும் ஆங்குஒழியப்**
**போந்தேற்கு (பெரி. திரு. 46)**

என்று தன் மனமும் அறிவும் திருமாலிடம் சென்றதாகவும், அவள் கை வளையல்களும் மேகலை என்ற அணிகலனும் கழன்று வீழ்ந்ததாகவும் குறிப்பிடுகின்றாள்.

**என்இவைதான் வாளா? எனக்கே பொறைஆகி**
**முன்இருந்து மூக்கின்று - மூவாமைக் காப்பதோர்**
**மன்னும் மருந்து அறிவீர் இல்லையே? (பெரி. திரு. 50)**

இவ்வாறு தலைவனின் அழகில் மயங்கிய தலைவி காதல் துன்பத்தால் வருந்தி, பலவாறு புலம்புவதைக் காணமுடிகிறது.

**தன்னை நான்**


ISBN Number: 978-93-91115-20-3

**மின்இடையார் சேரியிலும் வேதியர்கள்**
**வாழ்இடத்தும்**
**தன்அடியார் முன்பும் தரணி முழுதுஆளும்**
**கொல்நவிலும் வேல்வேந்தர் கூட்டத்தும்**
**நாட்டகத்தும்**
**தன்நிலைமை எல்லாம் அறிவிப்பேன் (பெரி. திரு. 74)**

என்ற வரிகளில், திருமாலிடம் காதல் கொண்ட தலைவி, அவன் அழகில் மயங்கி, பலவாறு துன்பம் அடைந்து, அவனை அடைவதற்காக மடல் ஏற முற்பட்டதை எடுத்தியம்புகிறது.

**...மற்றுஇவைதான்**
**உன்னி உலவா உலகுஅறிய ஊர்வன்நான்**
**முன்னி முளைத்துஎழுந்து ஓங்கி ஒளிபரந்த**
**மன்னிய பூம்பெண்ணை மடல் (பெரி. திரு. 78)**
**என்நிலைமை எல்லாம் அறிவித்தால்**
**எம்பெருமான்**
**தன்அருளும் ஆகமும் தாரானேல் (பெரி. திரு. 79)**

என்ற வரிகள், திருமாலின் பல்வேறு செயல்களைக் குறிப்பிட்டு, பின்னர் இவற்றையெல்லாம் உலக மக்கள் அறியும்படி வெளிப்படுத்துவேன். அதற்காக அழகிய பனை மடலைக் கொண்டு செய்த மடல் ஏறுவேன் என்ற தலைவியின் எண்ணத்தை வெளிப்படுத்துகிறது.


ISBN Number: 978-93-91115-20-3

இதன்மூலம் பெரிய திருமடலில், பெண்கள் மடல் ஏறுதல் இல்லை என்ற இலக்கண மரபில் மாற்றம் ஏற்படுவதைக் காணமுடிகின்றது. தான் விரும்பிய தலைவனை அடையத், தலைவி தன்னையே வருத்திக்கொள்ளத் துணிவது மூலம் அவளது பெருங்காதலை அறியமுடிகிறது. இங்கு இடம்பெறுவது உலகியல் காதலோ, காமம் காரணமாகிய காதலோ அல்லாமல், பேரின்பக் காதல் உணர்வாக வெளிப்படுகின்றதை உணரமுடிகிறது.

**பரணி இலக்கியம்**

மன்னன் பகைவனது நாட்டை வெல்வதற்காக வஞ்சிப் பூமாலை அணிந்து போர்க்களம் சென்றான். உழிஞைப் பூமாலை அணிந்து பகைவனது மதிலை முற்றுகை இட்டான். தும்பைப் பூமாலையைச் சூடிப் பகைவனுடன் போர் செய்தான். பகை வீரர்கள் மடிந்தனர்; குருதி ஆறு பெருக்கெடுத்து ஓடியது; பகைவனை வென்றான். இவ்வாறு படை எடுத்துச் சென்று வாகை மாலை சூடிய மன்னனின் வீரத்தைப் புகழ்வதே பரணி இலக்கியம் ஆகும்.

**வஞ்சி மலைந்த உழிஞை முற்றி**
**தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை**
**வெம்புசின மாற்றான் தானை வெங்களத்தில்**
**குருதிப் பேராறு பெருகும் செங்களத்து**


ISBN Number: 978-93-91115-20-3

**ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே (பன்னிரு: 240)**

பரணி என்பது நட்சத்திரத்தின் பெயர். பரணி நாளில் பிறந்தவன் பெரும் வீரனாவான் என்பது பழந்தமிழர் நம்பிக்கை. காளியையும் யமனையும் தெய்வங்களாகக் கொண்ட நாள். காளியைத் தெய்வமாகக் கொண்டு பாடப்படுவதால், இந்நூலுக்குப் பரணி எனப்பெயர் வந்தது என்றும் கூறுவர்.

**ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**
**மானவனுக்கு வகுப்பது பரணி (இலக். வி. 839)**

என்று இலக்கண விளக்கம் நூலும்,

**ஏழ்தலை பெய்த நூறுஉடை இபமே**
**அடுகளத்து அட்டால் பாடுதல் கடனே (பன்னிரு. 243)**

என்று பன்னிரு பாட்டியலும் பரணி இலக்கியத்திற்கான இலக்கணத்தைக் குறிப்பிட்டுள்ளது.

பரணியின் இலக்கணம் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. இருந்தாலும் 'யானை மறம்' என்ற துறையைச் சுட்டி உள்ளது. யானைகளின் வெற்றியைப் பாடுவது இந்தத் துறை. சங்க இலக்கியங்களிலும் பரணி இலக்கியக் கூறுகள் காணப்படுகின்றன. சோழர் காலத்தில்தான் பரணி ஒரு தனி இலக்கிய வகையாகத் தோற்றம் பெற்றது.

 ISBN Number: 978-93-91115-20-3

கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, களம் பாடியது, கூழ் அடுதல் என்ற அமைப்பு முறையில் பரணி இலக்கியங்கள் பாடப்பெறும்.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கலிங்கத்துப் பரணி நூலே இன்று நமக்குக் கிடைக்கும் முதல் பரணி நூலாகும். சமயத் தத்துவங்களையும், சமயம் தொடர்பான புராணக்கதைகளையும் அடிப்படையாகக் கொண்டும் பரணி நூல்கள் வெளிவந்தன. ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணி, தத்துவராய சுவாமிகள் இயற்றிய அஞ்ஞவதைப் பரணி, சீனிப் புலவர் பாடிய திருச்செந்தூர் பரணி, இரணியன் வதைப் பரணி முதலியன குறிப்பிடத்தக்கவையாகும்.

**கலிங்கத்துப் பரணி**

முதல் குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டின் மீது படை எடுத்து வெற்றி பெற்றான். இந்த வெற்றியைச் சிறப்பித்துப் பாடியதே கலிங்கத்துப் பரணி ஆகும். கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் சயங்கொண்டார் ஆவார் 'பரணிக்கு ஓர் சயங்கொண்டான்' என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இவரைப் பாராட்டி உள்ளார்.


**ISBN Number: 978-93-91115-20-3**

கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் முதல் குலோத்துங்க சோழன். அவர் கலிங்கத்துப் போரில் வெற்றி பெற்ற பின்பு, சயங்கொண்டாரோடு உரையாடிக் கொண்டிருக்கையில், புலவரை நோக்கி, 'புலவரே! கலிங்கத்தைச் சயங்கொண்டமையால் நானும் சயங்கொண்டான் ஆயினேன்' என்று கூறினார். இதனைக் கேட்ட சயங்கொண்டார் உளம் மகிழ்ந்தார். 'அப்படி ஆனால் சயங்கொண்டானைச் சயங்கொண்டான் பாடுவது மிகப் பொருத்தம்' என்று கூறி, செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியைப் பாடினார் என்பர்.

கலிங்கத்துப் பரணி 14 பகுதிகளை உடையதாக அமைக்கப்பட்டுள்ளது. கடவுள் வாழ்த்துப் பகுதிக்கு அடுத்து, கடைதிறப்பு எனும் பகுதி அமைந்துள்ளது. கலிங்கப் போர் புரியச் சென்ற மறவர்கள் காலம் தாழ்த்தி வந்தனர். இதனால் மகளிர் ஊடல் கொண்டு கதவை அடைத்தனர். அவ்வூடல் நீக்கப் புலவர் கடையைத் (கதவை) திறக்கச் சொல்வது கடைதிறப்பு எனும் பகுதி ஆகும். இப்பகுதி முழுவதும் காதல் இலக்கிய மரபை அடியொற்றி அமைந்துள்ளது.

**மகளிரின் ஊடலும் காதலும்**

கலிங்கப்போர் முடிந்து வீரர்கள் சோழ நாடு திரும்புகின்றனர். ஆனால் தாம் வருவதாகக் கூறிய காலம்

 **ISBN Number: 978-93-91115-20-3**

கடந்து பணி முடித்து வருகின்றனர். காலம் கடந்து வருவதால் மகளிர் ஊடல் கொள்கின்றனர். தம் கணவனை எதிர்கொண்டு வரவேற்காமல் கதவைத் தாழிட்டுக் கொள்கின்றனர். இந்நிலையில் புலவர் மகளிரைக் கதவு திறக்க வேண்டுகிறார். இது கடை திறப்பு எனும் பகுதியாக அமைகின்றது.

**செக்கச் சிவந்த கழுநீரும்**
**செகத்தில் இளைஞர் ஆருயிரும்**
**ஒக்கச் செருகும் குழல்மடவீர்**
**உம்பொற் கபாடம் திறமினோ (கடைதிறப்பு.74)**

என்ற வரிகள், பெண்கள் கூந்தலில் செங்கழுநீர் மலர்களைச் செருகுகின்றார்கள். அவர்கள் செங்கழுநீர் மலர்களை மட்டுமல்லாது, இவ்வுலகத்தில் வாழும் இளைஞர்களின் உயிர்களையும் சேர்த்து செருகுவதாகக் குறிப்படுகின்றது.

கணவன்மார் குறித்துச் சென்ற காலம் வந்தது. அவர் வருகையை எதிர்பார்த்து மனைவியர் கதவைத் திறந்து வழிமேல் விழி வைத்துப் பார்த்து நின்றனர். கணவன்மார் வரவில்லை. துயரத்தால் வெறுப்பு உற்றுக் கதவைப் படார் எனச் சாத்தினர். இவ்வாறாக இரவு முழுவதும் திறப்பதும் சாத்துவதுமாக இருந்தனர் என்பதை,

**வருவார் கொழுநர் எனத் திறந்தும்**


ISBN Number: 978-93-91115-20-3





**வாரார் கொழுநர் என அடைத்தும்**
**திருகும் குடுமி விடியளவும்**
**தேயும் கபாடம் திறமினோ (கடைதிறப்பு. 69)**

என்ற கலிங்கத்துப்பரணி வரிகள் காட்சிப்படுத்துகின்றன.

இவ்வாறு கலிங்கத்துப்பரணி, மகளிரின் பல்வேறு காதல் செயல்களையும், நிகழ்வுகளையும் கடைதிறப்புப் பகுதியில் பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது. பரணி இலக்கியம், வீரத்தை மையப்பொருளாகக் கொண்டு பாடினாலும், அக இலக்கிய மரபையும் கொண்டு அமைந்துள்ளது. போர்க்களம் புகுந்த தங்கள் கணவர் மீது, தீரக்காதல் கொண்ட பெண்கள் அவர்களின் வரவை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்து காத்து இருந்துள்ளதை அறியமுடிகிறது. அவர்கள் வந்ததும், தங்கள் கணவர் மேல் கொண்ட காதல் ஊடலாக வெளிப்பட்டு, ஊடலும் காதலுமாக கலிங்கத்துப்பரணி காதலுணர்வை வெளிப்படுத்துகின்றது.

**முடிவுரை**

இவ்வாய்வின்மூலம் சிற்றிலக்கியங்களில் காதலன்பு பாடப்பட்டுள்ளது உறுதியாகின்றது. குறவஞ்சி, தூது, உலா, மடல் ஆகிய இலக்கிய வகைகளின் பாடுபொருளாக காதல் அமைந்துள்ளது. பரணி இலக்கியத்தின் பாடுபொருளாக வீரம் பாடப்படுகின்ற போதிலும், அகமும் பாடப்பட்டுள்ளதை


ISBN Number: 978-93-91115-20-3

அறியமுடிகிறது. இவ்விலக்கியங்களில் வெளிப்படுகின்ற காதலுணர்வு பெரும்பாலும் பெண்களின் அகவுணர்வாகவே காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. அக்காலப் பெண்களின் காதல் வெளிப்பாடாகிய ஏக்கம், வருத்தம், ஊடல் ஆகியவை இவ்விலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. பெண்கள் தங்களது காதலை வெளிப்படுத்துவது மரபல்ல என்ற பொதுவிதிக்கு மாறாக, சிற்றிலக்கியங்களில் பெண்களின் காதலுணர்வே பெரிதும் இடம்பெறுகிறது என்பது இவ்வாய்வின் முடிவாக அமைகிறது.

**பார்வை நூல்கள்**

[1] அருணாச்சலம், மு. *பிரபந்த மரபியல்*. தமிழ்நாடு அரசு வெளியீடு.

[2] இளம்பூரணம் உரை. *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-02

[3] கோவிந்தராச முதலியார், கா.ர. *பன்னிரு பாட்டியல்*. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி – 6.

[4] கோபாலையர், தி.வே. *இலக்கண விளக்கம்*. ஜெமினி அச்சகம், கும்பகோணம்.

[5] சங்குப் புலவர், தி. *மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி – 6.

[6] சுந்தர் கிதாம்பி. *பெரிய திருமடல்* pdf. www.prapatti.com.

[7] செயராமன், ந.வீ. *பாட்டியலும் இலக்கிய வகைமைகளும்.* இலக்கியப் பதிப்பகம், சென்னை .

[8] செல்வராசு,நா. *இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்கள்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் -629 001.

[9] *தமிழ் அடோன் அகராதி.* அடோன் புப்ளிஷிங் குரூப், வாஞ்சியூர், திருவனந்தபுரம் – 695 035.

[10] புலியூர்க்கேசிகன். *கலிங்கத்துப்பரணி.* ரிதம் நூல் பகிர்வாளர், சென்னை – 15.

[11] புலியூர்க்கேசிகன். *திருக்குற்றாலக் குறவஞ்சி மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை-14.

[12] மார்க்ஸ், பேரா. *சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள்.* சிலிக்குயில் வெளியீடு, குடந்தை – 612 001.

[13] முருகேசன், கதி.முனைவர், *ஒட்டக்கூத்தரின் விக்கிரம சோழன் உலா மூலமும் உரையும்.*சாரதா பதிப்பகம், சென்னை-14.

[14] விமலானந்தம், மது.ச. *தமிழ் இலக்கிய வரலாறு.* பாரி நிலையம், மெட்ரோ ரயில் நிலையம், சென்னை - 001.


**ISBN Number: 978-93-91115-20-3**

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **ISBN Number: 978-93-91115-20-3**

# Love and Hospitality in Sangam Literature

**Dr. T. Gowri**, Guest lecturer of Tamil, PG & Research department,
Sri Meenakshi Govt. Arts College for Women, Madurai.
**ORCiD: [https://orcid.org/0000-0002-6473-9774](https://orcid.org/0000-0002-6473-9774)**
**DOI: 10.5281/zenodo.8126851**

## Abstract

*It is true that love… love… love… love alone guides the world. Love is what makes man run and makes man run. Eve his selfishness is often placed next to love. That is why he adds property to seven generations even though he does not know whether there will be descendants after him. In his life, no matter how much he is surrounded by cheating, cheating, rivalries and jealouries. Only love guides him. That love expresses itself in the dimensions of friendship, affection, love, compassion, attachment and concern. Expression of love in such situations may be physical, mental, monetary or material. But if you look closely at this, the expression of love is the exchange of something from one person to another. The main manifestation of love is to give something that one likes or something that one likes that one likes. At the top of the list is food. Although food is served in many ways, for hunger, for health, for taste, it is also an expression of love. This condition may have been the same as when the human race appeared and he started cooking and eating. Literature also shows us this. When the people who lived in the mountains, forests, seashores and fields became civilized and began to consume the food available around them, they gave their own resources and began to get the things they needed*

 ISBN Number: 978-93-91115-20-3

*from the people living next to their land. It is possible that the exchange of love in him first took place through this barter system. There are numerous references in the sangam literature to the giving of food to the seeker of love and to transcend itself. The way of giving food willingly can be called feasting and the relationship created by feasting can be called hospitality. This time, this article is intended to highlight the state of love manifested in hospitality in the life of the people of the sangam period as recorded in sangam literary songs.*

**Keywords:** Sangam literature, Hospitality, Love.

**References**

[1] Elampooranar, (Ed.). *Tholkappiam – Porulathigaram*. Saratha Publication, Thirteenth Edition: 2014.

[2] Balasubramanian, K.V. (Ed.). *Nattrinai*. New Century Book House, Chennai, Third Edition: 2007.

[3] Viswanathan, A. (Ed.). *Kalithogai*. New Century Book House, Chennai, Third Edition: 2007.

[4] Dhatchinamoorthy, A. (Ed.). *Aingurunooru*. New Century Book House, Chennai, Third Edition: 2007.

[5] Jeyabal, R. (Ed.). *Agananooru-1*. New Century Book House, Chennai, Third Edition: 2007.

[6] Balaiyan, A.P. (Ed.). *Ettuthogai (Purananooru) Moolamum Uraiyum*. Saratha Publication, Forth Edition: 2012.

[7] Nagarajan, V. (Ed.). *Patthupattu (Vol. II) (Malaipadukadam).* New Century Book House, Chennai, Third Edition: 2007.

 ISBN Number: 978-93-91115-20-3

[8] Nagarajan, V. (Ed.). *Pathupattu (Vol. II), (Perumbanattrupadai).* New Century Book House, Chennai, Third Edition: 2007.

[9] Mohan, R. (Ed.). *Pathupattu (Vol. I) (Porunaratruppadai, Sirumpanatruppadai).* New Century Book House, Chennai, Third Edition: 2007.

[10] Kodhandam, K.M. (Ed.). *Thirukkural.* New Century Book House, Chennai, Third Edition: 2007.

[11] Venkadasamy Nattar, N.M. (Ed.). *Silappathigaram.* Ramaiya Publication, Chennai, 2005.


**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 **ISBN Number: 978-93-91115-20-3**

# சங்க இலக்கிய விருந்தோம்பலில் அன்பு

**முனைவர் தி. கௌரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மதுரை.
**ORCiD: https://orcid.org/0000-0002-6473-9774**
**DOI: 10.5281/zenodo.8126851**

## ஆய்வுச்சுருக்கம்

*அன்பு... அன்பு... அன்பு.... அன்பு ஒன்றே உலகை வழிநடத்திச் செல்கின்றது என்பதே உண்மை. மனிதன் இயங்குவதும் மனிதனை இயக்குவிப்பதும் அன்பே. அவனது சுயநலம் கூட பல நேரங்களில் அன்பை ஒட்டியே அமைகின்றது. அதனால்தான் தனக்குப்பின் சந்ததி தலைக்குமா என்று தெரியாத போதிலும் கூட ஏழு தலைமுறைக்கும் சொத்து சேர்க்கின்றான். அவனது வாழ்வில் சூது, வஞ்சகம், போட்டி, பொறாமைகள் என எவ்வளவுதான் அவனைச் சூழ்ந்து இருந்தாலும் அன்பு நிலை ஒன்றே அவனை வழிநடத்திச் செல்கின்றது. அந்த அன்பு, நட்பு, பாசம், காதல், பரிவு, நேசம், பற்று, அக்கறை ஆகிய பரிமாணங்களில் தன்னை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறான நிலைகளில் அன்பை வெளிப்படுத்துவது என்பது உடல் வழியாகவோ மன வழியாகவோ, பண வழியாகவோ, பொருள் வழியாகவோ அமைந்துவிடலாம். ஆனால் இதை உற்று நோக்கினால் அன்பின்*

 ISBN Number: 978-93-91115-20-3

வெளிப்பாடாக ஒருவரிடம் இருந்து ஏதோ ஒன்று பரிமாற்றம் செய்து கொள்வதாகவே அமைகின்றது தனக்கு பிடித்தமானவற்றையோ அல்லது தனக்குப் பிடித்தவருக்கு பிடித்தவற்றையோ கொடுத்து மகிழ்வதே அன்பின் தலையாய வெளிப்பாடாக அமைகின்றது. அவ்வகையில் முதலிடம் பெறுவது உணவு. பசிக்காக ஆரோக்கியத்திற்காக சுவைக்காக என்று உணவு பலவாறு பரிமாறப்பட்டாலும் அதுவும் அன்பின் வெளிப்பாடாகவே அமைகின்றது. இந்நிலை மனித இனம் தோன்றி அவன் சமைத்துண்ணத் தொடங்கிய பொழுதே உருவான ஒன்றாக இருக்கக்கூடும். இதை இலக்கியங்களும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. மலைகளிலும் காடுகளிலும் கடந்த பரப்புகளிலும் வயல்வெளிகளிலும் வாழ்ந்த மக்கள் தன்னைச் சுற்றிக் கிடைக்கின்ற உணவுப் பொருட்களை உட்கொள்ளத் தொடங்கிய நாகரிகம் பெற்றவுடன் தன்னிடம் மிகையாக உள்ள பொருட்களைக் கொடுத்துத் தனக்குத் தேவையான உணவுப் பொருட்களை தன் நிலத்திற்கடுத்து வாழும் மக்களிடமிருந்து பெறத் தொடங்குகின்றான். இவ்வாறான பண்டமாற்று முறை வழியாகவும் அவனுக்குள் அன்பு பரிமாற்றம் முதலில் நிகழ்ந்தது எனலாம். அன்பால் தன்னை நாடி வருபவருக்கும் தன்னைக் கடந்து செல்பவர்க்கும் உணவுப்

 ISBN Number: 978-93-91115-20-3

*பொருட்களைக் கொடுத்ததற்கான எண்ணற்ற சான்றுகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. அவ்வாறு விரும்பி உணவு வழங்கும் முறை 'விருந்து' என்றும், விருந்து படைத்து உறவு வளர்த்ததை விருந்தோம்பல் என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். இம்முறை சங்க இலக்கியப் பாடல்களில் பதியப்பட்டுள்ள விதம் கொண்டு சங்க கால மக்களின் வாழ்வில் விருந்தோம்பலில் வெளிப்பட்ட அன்பு நிலை பற்றி எடுத்துரைக்கும் வண்ணம் இக்கட்டுரை அமைகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** சங்க இலக்கியம், விருந்தோம்பல், அன்பு.

**முன்னுரை**

உணவுப் பழக்கவழக்கம் என்பது பண்பாட்டு வளர்ச்சியின் இன்றியமையாத அங்கமாகவே திகழ்கின்றது அன்று தொட்டு இன்றுவரை தமிழரிடையே எண்ணற்ற வகையாக உணவுகள் இருந்துள்ளமையை இலக்கியங்கள் நமக்குப் பறைசாற்றுகின்றன நம் முன்னோர்களான பழந்தமிழர்கள் சுவை மிக்க உணவுப் பொருட்களை சமைப்பதிலும் அதைப் பிறருக்கு கொடுத்து மகிழ்வதிலும் தேர்ச்சி பெற்றவராகவும் இருந்துள்ளனர். அவ்வாறு பிறருக்குக் கொடுத்து மகிழ்வதையே நாம் விருந்தோம்பல் என்று பெயர் சூட்டிக் கொண்டோமாக

 **ISBN Number: 978-93-91115-20-3**

இருக்கலாம். சங்க கால மகளிர் மேற்கொண்டு ஒழுகிய வாழ்வியல் பண்புகளில் விருந்தோம்பல் தனிச் சிறப்பு உடையது. அன்பின் வழிபட்டே இது தலைத்தோங்கியுள்ளது. பின் நாட்களில் இல் வாழ்வின் இன்றியமையாத தலையாய கடமையாக விருந்தோம்பல் உருவெடுத்துள்ளது. தம்மை நாடி வந்தவர் யாராக இருந்தாலும் அதாவது உறவினர்களாக நண்பர்களாக புதியவர்களாக இருப்பினும் வந்த நேரம் கருதாது அவர்களிடம் இன்சொல் கூறி தம்மிடம் உள்ளதை பகிர்ந்து கொடுத்தோ, புதிதாகப் பெற்றோ, சமைத்தோ அவர்களை மகிழ்விப்பதுவே விருந்தின் நோக்கமாகும். அந்த நோக்கம் நிறைவேற அன்பும் அக்கறையுமே வழியாய் அமைகின்றது.

**சங்க மகளிரும் அன்பு விருந்தோம்பலும்**

விருந்திற்குத் தேவையான பொருட்களை ஈட்டித் தருவது ஆண்களாக இருந்தாலும் ஒன்றைப் பலவாக்கி இன்முகத்தோடு பரிமாறும் பொறுப்பு பெண்களையே சாரும் விருந்தினரின் உணவை முன்னிறுத்திய மகிழ்வு பெண்களைச் சார்ந்தே அன்று தொட்டு இன்றுவரை அமைந்திருக்கின்றது என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. அதனால், காலப்போக்கில் பெண்களும் விருந்தோம்பலை தம் வாழ்வின் மகிழ்வாகவே கருதத் தொடங்கி விட்டனர்.


ISBN Number: 978-93-91115-20-3

வறுமையிலும் விருந்து போற்றியுள்ளனர் தலைவனுக்கும் தலைவிக்கும் ஊடல் நேர்ந்தபோதும் கூட விருந்தினர் வந்துவிட்டால் ஊடலையும் மறந்து விருந்தினரை சங்க காலப் பெண்கள் மனதார உபசரித்திருக்கின்றனர்.

**அறவோர்க்கு அளித்தல் அந்தணரை உபசரித்தல்**
**துறவோர்க் கெதிர்த்தல் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடல். (சிலம்பு: கொலைக்களக் காதை: 71. 73)**

போன்றவை அக்கால மகளிரின் தலைசிறந்த பண்புகளாகத் திகழ்ந்தது. சுற்றமோடு கூடி வாழ்பவனே மனிதன் என்பதை பெண்கள் உணர்ந்தே விருந்தை பேணிக் காத்து வந்தனர். தன்னை நாடி வந்த விருந்தினருக்கு இன்சொல் கூறுதல், கால் கழுவ நீர் அளித்தல், அமர்வதற்கு மனையை அளித்தல், படுக்கப் பாய் கொடுத்தல், தங்குவதற்கு இடம் அளித்தல் ஆகியவை அன்புடன் விருந்தினர்களுக்கு செய்யும் கடமையாகவே பின்பற்றி வந்தனர். சங்க மகளிரின் வாழ்வியல் ஆண்களைச் சார்ந்து இருந்தாலும் விருந்தோம்பல் பெண்களைச் சார்ந்தே அமைந்திருந்தது.

***நற்றிணை***

மனித வாழ்வில் இல்லற மேன்மைக்கும் உயர்வுக்கும் மனிதனின் உயர்வான பண்பிற்கும்


**ISBN Number: 978-93-91115-20-3**

காரணமாய் அமையும் சிறப்பு அம்சங்களில் இன்றியமையாத ஒன்றாக விளங்குவது விருந்து உபசரிக்கும் பண்பு என்பதை நற்றிணை தன் பங்கிற்கு பதிவு செய்துள்ளது. அவையாவன

**திறம்புரி கொள்கையோடு இறந்து செயின் அல்லது**

**அரும்பொருள் கூட்டம் இருந்தோர்க்கு இல்லென (நற்., பா. 252)**

என்ற அடிகள் அன்பான விருந்தோம்பலின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. ஈகை விருந்து என்பன மனித வாழ்வின் இயல்பான பண்புகளாக அமைந்திருப்பதையும் மற்றவர்களுக்கு கொடுத்து உதவுவதில் நிறைவு பெறும் பண்பும் இப்பாடலின் வழி அறிய வைக்கப்படுகிறது.

இல்லறம் மேன்மையுற கணவனும் மனைவியும் விருந்து உபசரித்து வாழ்வது சிறப்புடையதாய் கருதப்படுகிறது விருந்து உபசரிப்பிற்கு விதிமுறை இருப்பது போல் விருந்தினர் வருவதற்கு விதிமுறை இல்லை. அதனால் நேரம் தவறி மாலை வரை வராமல் இரவு காலத்து வரினும் அவர்களைக் கண்டு களிப்படைகின்றனர் என்பதை,

**அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**

**முல்லை சான்ற கற்பின்**


ISBN Number: 978-93-91115-20-3

**மெல்லியல் குறுமகள் … (நற்., பா. 142)**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. மேலும்,

**அரும்படர் அகல் நீக்கி விருந்து**

**அயர் விரும்பினன் திருந்து இழையோள (நற்., பா. 361)**

என்னும் அடிகளால் தலைவியானவள் கணவனுக்கும் பிறருக்கும் விரும்பி அன்பாக உணவு படைக்கும் பண்புள்ளவள் தலைவி என்பது அறியப்படுகிறது.

**எமக்கே வருகதில் விருந்தே சிவப்பானன்று**

**சிறிய முன்னெயிறு தோன்ற**

**முறுவல் கொண்ட முகங்காண் கம்மே (நற்., பா. 120)**

என்ற பாடல் அடிகள் தலைவன் தலைவியின் ஊடலைத் தணிவிக்கும் பொருட்டு விருந்தினர் அமைவர் என்பதையும் ஊடல் எவ்வளவு இருந்தபோதும் விருந்தினரான அவர்களுக்கு கடமை தவறாது பண்பில் சிறந்து உபசரிக்கும் வல்லமை படைத்தவள் தலைவி என்பதை நற்றிணை உணர்த்துகிறது.

***ஐங்குறுநூறு***

**நற்குடிப் பெண்ணின் அன்பும் விருந்தோம்பலும்**

ஐங்குறுநூற்றின் தலைவி இல்லறக் கடமையை நிறைவேற்ற வயல்கள் நன்கு விளைய வேண்டும் என்று வேண்டுகின்றாள் எவ்வாறென்றால்,

**வாழியாதன் வாழியவினி விளைக வயலே**

 ISBN Number: 978-93-91115-20-3

**வருக இரவலர்... (ஐங்குறுநூறு, பா. 10)**

என்று பொதுநல நோக்கோடு வேண்டுவதை இப்பாடலடி உறுதி செய்கின்றது. ஏனெனில் வயலில் விளைச்சல் பெருகின் உணவு உற்பத்தி பெருகும் உணவு உற்பத்தி பெருகினால் வாழ்வாதாரம் பெருகும் மக்களின் இன்றியமையாமை நிறைவு பெறும். வயிறார உண்டு, மனதார மகிழ்ந்து வாழும் மனிதனது மூலாதாரம் உணவே என்று உணர்ந்தவளாக மக்களின் நலன் வேண்டி அன்புள்ளம் கொண்டு விளைச்சலுக்காக வேண்டுகிறாள்.

**கலித்தொகை**

விரிந்துபசரித்தல் பண்பு என்றதோடு மட்டுமல்லாமல் அன்புக்காகவும் மகிழ்வுக்காகவும் மக்களால் பின்பற்றப்பட்டுள்ளது என்பதை கீழ்வரும் பாடல் அடிகள் உணர்த்தும். மேலும் பருவ காலத்தை அனுபவிக்க மக்கள் இது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் அறியப்படுகிறது. .இந்நிலை அன்று மட்டுமல்லாமல் இன்றும் பின்பற்றப்படும் செயலாக நம்முள் பயணிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**தன் அருவி நறுமுல்லை போது**
**ஆரக் கொள்ளும் கமழ் குரற்கு என்னும்**
**தூது வந்தன்றே தோழி**

 ISBN Number: 978-93-91115-20-3





**துயர் அறு கிளவியோடு அயர்ந்தீகம் விருந்தே (கலி., பா. 32:16-19)**

இளவேனிலுக்கு விருந்து போற்றுவோம் என்ற தலைவியின் கூற்றில் இதை உணர முடிகின்றது.

சிறு சோறு (நிலாச்சோறு) சமைத்து அதனை பிறருடன் களிப்புற்று உண்டு மகிழ்ந்ததை, **சிறு சோறு மடுத்து நீ நறு நுதலவ ரோடு தக்கது (கலி., பா. 59: 20)** என்ற பாடலடிகள் உறுதிப்படுத்துகிறது. ஊடல் தீர்க்கும் பொருட்டு விருந்தினர் வருவதை நற்றிணை போலவே மருதக்கலியும் புலப்படுத்துகின்றது. **விருந்து எதிர்க் கோடலின் மறப்பல் (கலி., பா. 75: 77)** நெய்தல் நிலப் பெண்களிடம் விருந்தோம்பும் பண்பு மிகச்சிறந்திருந்தது. தம் இல்லத்திற்கு விருந்தினர் வரவேண்டும் என்றும் அவ்விருந்தினருக்கு இனிய உணவினை அளிக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவராகவும் விளங்கினர். பொன்னாலாகிய வளையல்களை உடைய இம்மகளிர் சமைத்த உணவானது கொக்கினது நகம் போன்று இருக்கும். அச்சோற்றினை வந்த விருந்தினருக்கு அன்புடன் நிவேதனமாக படைத்திருக்கின்றனர்.

***புறநானூறு***

தமிழரின் வாழ்வியலை பறைசாற்றும் இப்புறநானூறானது ஒருவன் தன் இல்லத்திற்கு தன்னை அன்புடன் நாடி வருபவரை தான் மனமுவந்து உறவு


ISBN Number: 978-93-91115-20-3

பாராட்டுவது பற்றிக் கூறி மனிதனின் மாண்பை விளக்குகிறது.

**நெடுநகை வந்த விருந்திற்கு மற்றுத் தன்**
**இருப்புடைப் பழவாள் வைத்தனன் இன்றிக்**
**கருங்கோட்டிச் சீறியாழ் பாணையம் இது கொண்டு**
**ஈவது இலாளன் (புறநானூறு, பா. 316: 5-8)**

என்ற பாடல் அடிகள் மறக்குடி வீரன் ஒருவன் தன்னிடம் இருந்த பழைய வால் ஒன்றை விற்று தன் இல்லிற்கு வந்த விருந்தினர்களை அன்புடன் உபசரிக்கின்றான் என்றும் மறுநாளும் விருந்தினர் வர தனது யாழை பணயம் வைத்து விருந்து படைக்கிறான் என்றும் கூறுகின்றது. தன் வறுமையை மட்டும் உணர்ந்தவராக இருந்தால் விருந்தினராக வந்திருக்க மாட்டார். ஆனால், வந்தவர் தன்னை மதித்து தன் அன்பினை உணர்ந்தவர் என்பதால்தான் இல்ல நாடி வந்திருக்கின்றனர். அதனால் நான் தானே அவரை உபசரிக்க வேண்டும் என்று உறவுக்குக் கொடுத்த மரியாதையையும் மனிதநேயத்தையும் இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

தடாரி, கிணற்றை, பறை போன்ற கருவிகளை இசைக்கும் கிணைவன் போன்ற இரவலர்களுக்கு நெய்யில் பொரித்த தாளித்த ஆட்டுக்கறியும் மணிகலம் நிறைய மனம் கமலும் மதுவும், பன்றியின் கொழுத்த


ISBN Number: 978-93-91115-20-3

கறியை நறுநெய்யில் உருக்கி சமைத்த உணவும், சோறு, உணவு, நெய், பால் போன்ற உணவுப் பொருட்களை அளித்து அவர்களை அன்புடன் மகிழ்வித்திருக்கின்றான். மேலும், களாம்பழம் போல புளிப்பு ஏறிய விளைந்த கல் காய வைத்த கறித்துண்டு அரிசியோடு நெய் கலந்து சமைத்து துடுப்பால் துழாவிச் செய்த கலியாகிய வெண்சோறு இவற்றை பாணர்களுக்கு விருந்துணவாகக் கொடுத்து மன்னன் அவர்களை மகிழச் செய்திருக்கிறாள். இதற்கு மன்னனின் அன்பே பிரதானமாக இருந்துள்ளது. தன் இல்லம் தேடி வந்த விருந்தினருக்கு மட்டும் தான் உபசரிப்பு என்ற பண்பில்லாமல் தான் அன்போடு சந்திக்கும் யாராக இருந்தாலும் எங்கிருந்தாலும் அவர்களுக்கு உணவு கொடுப்பதையும் விருந்தாகக் கொள்ளலாம் என்பதையும் புறநானூறு நமக்கு விளக்குகின்றது. வேடன் ஒருவன் சுட்ட முயலை பாணனுக்கு அன்போடு கொடுத்ததையும் தான் வேட்டையாடிய மான் இறைச்சியைச் தானே சுட்டுக் கொடுத்ததையும் வைத்து உபசரிப்பிற்கு அன்பே பிரதானமாக விளங்கியது உறுதியாகிறது.

**பத்துப்பாட்டு**

விருந்து என்ற சொல் புதுமையை குறித்து பின்பு ஆகுபெயரால் விருந்தினரை குறித்து வழங்கலாயிற்று. “விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே”

 ISBN Number: 978-93-91115-20-3

என்ற தொல்காப்பிய பொருளதிகார நூற்பா வழியாக விருந்து என்பது புதுமை என அறியலாம்.

**மறட்பருங் கேண்மையோ டயப்பரி சாரமும்**
**விருந்துபுறந் தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்**
**(சிலம்பு., மனை.காதை: 85 - 86)**

என்று விருந்தினரை அன்போடு காத்தோம்புகின்ற வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாகும் என்கிறார் இளங்கோவடிகள். சங்க இலக்கியங்கள் வாழ்வின் கண்ணாடியாக மக்களின் ஒட்டுமொத்த வாழ்வைப் பறைசாற்றும் விதமாக அமைந்ததில் தமிழராக நாம் பெருமை கொள்வோமாக. அப்பெருமைக்கு பதினெண்மேற்கணக்கு நூல்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமே காரணமாக அமைகின்றது. காதலையும் வீரத்தையும் இரு அங்கங்களாக பகிர்ந்திருந்தாலும் அதன் உள்ளுறுப்பாக அன்பையும் விருந்தோம்பலையும் எண்ணற்ற வகைகளில் எண்ணற்ற பாடல்களில் பதிவு செய்த பெருமை நமது சங்கப் புலவர்களையே சாரும். அவ்வகையில் பத்துப்பாட்டில் எண்ணற்ற அன்பு விருந்தோம்பல் பாடல்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அவற்றில் சிலவற்றையே நாம் இங்கு காணவுள்ளோம்.

***சிறுபாணாற்றுப்படை***

இல்லறத்தின் அன்பான வெளிப்பாடான அறங்கலுள் ஒன்றாக விருந்தோம்பலை

 ISBN Number: 978-93-91115-20-3

*சிறுபாணாற்றுப்படை* சிறப்பான முறையில் பகிர்கிறது. ‘ஓய்மா நாட்டு நல்லியக்கோடன்’ தன்னை நாடி வந்த சிறு பாணர்களுக்கு தானே முன் நின்று விருப்புடனும் அன்புடனும் பரிவுடனும் விருந்துண்ணச் செய்தான் என்பதை,

**இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து**
**விளங்கு பொற் கலசத்தில் விரும்புபவன் பேணி**
**ஆனா விரிப்பின் தான் நின்று ஊட்டி (சிறுபாண்., பா. 85)**

இப்பாடல் அடிகளால் அறியலாம். அவ்வாறு விரும்பிய உணவை நூல் முறைப்படியும் சமைத்துள்ளனர் என்பதையும் இந்நூல் எடுத்தியம்புகிறது.

**கா ஏரி யூட்டிய கவர்கணைத் தூணிப்**
**பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்**
**பனிவதை மார்பன் பயந்த நுண்பொருட்**
**பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில் (சிறுபாண்., பா. 238-241)**

மேற்கண்டவாறு நல் உணவைப் பெற்றுப் பழகியிருந்தாலும் வறுமைப் பட்டபோது தன்மானத்தை இழக்காதவர்களாகவும் இரக்காதவர்களாகவும் கிடைத்த உணவைப் பகிர்ந்து உண்டவர்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதை,

**குப்பை வேலை உப்புஇலி வெந்ததை**


ISBN Number: 978-93-91115-20-3





**மடவோர் காட்சி நாணி கடை அடைத்து**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்**
**அழிபசி வருத்தம் வீட (சிறுபாண்., பா. 137-140)**

என்ற பாடலடிகளாலும் அறியலாம்.

*பெரும்பாணாற்றுப்படை*

உழவர்களுக்குப் பசி என்பதே தெரியாது அந்த நிலையில் வளத்தோடு வாழ்பவர்கள் அவர்கள். அவ்வாறு வளம் பெற்ற ஊரில் இரவலர்கள் சென்று தங்கினால் சோர்வில்லாத உழவர் தந்த வெண்மையான சோற்றை கோழிப் பொரியலுடன் பெறுவர் என்பதை,

**தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை**
**மல்லர் பேர் ஊர் மடியின் மடியா**
**வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி**
**மனைவாழ் அளகின் வாட்டொடும் பெருகுவீர்**
**(பெரும்பாண்., பா. 253-256)**

வேதங்களைப் பாதுகாக்கும் அந்தணர் வீட்டிற்குச் சென்றால் கற்புடைய மகளிர் ‘கருடச்சம்பா’ என்ற நெல்லால் ஆக்கிய சுவையான சோற்றை சிவந்த பசுவினுடைய பாலிலிருந்து மோராக்கி அதிலிருந்து பெற்ற கெட்டி வெண்ணெயை எடுத்து அதில் வதக்கி வெந்த மாதுளையினுடைய பசுமையான காயை மிளகுப்பொடி கலந்து கருவேம்பினது இலையைச் சேர்த்து நீண்ட மாமரத்தில் காய்த்த பசுமையான


ISBN Number: 978-93-91115-20-3

காய்களுடன் வடுக்களுடன் கலந்து அதை ஊறுகறியாகக் கொண்டு உண்பதற்கு அன்புடன் தருவர் என்ற செய்தியானது,

**செழுங்கன்று யாத்த சிறு நாள் பந்தர்**
**...தகை மான் காடியின் வகைப்பட பெறுகுவீர்**
**(பெரும்பாண்., பா. 297-310)**

என்ற இப்பாடலடிகளால் அறியப்படுகிறது.

***பொருநராற்றுப்படை***

உண்ணும் நேரத்தை அறிந்து பருத்த செம்மறியாட்டின் வெந்த தொடைக்கறியைக் கொடுத்து உண்க என்று உபசரித்ததையும் இரும்புக் கோளில் கோர்த்து வைக்கப்பட்ட சூடான இறைச்சியை வாயின் வலதும் இடமுமாக மாற்றி மாற்றி வைத்து உண்ணுமாறு உபசரித்ததையும் அறிய முடிகிறது. கரிகாற் பெருவளத்தான் முல்லை மொக்கு போன்ற தவிடு நீக்கப்பட்ட முனை முறியாத விரல் நுனி போன்ற அரிசிச் சோற்றை வறுத்துப் போட்ட பொறிக்கறியோடு அன்புடன் கொடுத்து விருந்தளித்திருக்கிறான். இரவு - பகல் கணக்கின்றி எந்த நேரமும் நிலத்தை ஏர் உழுவது போன்று பொருநர்கள் பல்லால் இறைச்சியை மென்று தின்று மகிழ்ந்ததையும் அறிய முடிகின்றது.

**பெறல் அருங்கலத்தில் பெட்டாங்கு 'உண்க' என்ப**


ISBN Number: 978-93-91115-20-3

**பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர**

**வைகல் வைகல் கைகலி பருகி (பொருநர்., பா. 156-158)**

பொன் கிண்ணத்திலே வேண்டி விரும்பிய மட்டும் அருந்தி மகிழுங்கள் என்று குங்குமப்பூ வாசம் வீசும் கள் தெளுவு உண்க என்று ஊற்றிக் கொடுத்துக் கொண்டே இருக்க அருந்திவிட்டு போதும் போதும் என்று சொன்னாலும் விடாது தருவான் என்று பொருநர்கள் கரிகாற் பெருவளத்தானை பற்றிக் கூறி அவனது அன்பை வெளிப்படுத்துகின்றனர்.

***மலைபடுகடாம்***

ஒருவர் விருந்தினராக பல நாட்கள் வந்து தங்கியிருந்தாலும் முதல் நாள் போன்ற ஆர்வம் சிறிதும் குன்றாது விருந்தோம்பி மகிழ்வதே பண்பாடாகும் என்பதை,

**நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது**

**தலைநாள் அன்ன புகலொடு வழி சிறந்து**

**பலநாள் நிற்பினும் பெறுகுவிர் நில்லாது (மலைபடு., பா. 565-556)**

இவ்வடிகள் உணர்த்துகின்றது. இதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது அன்பு நிலை மட்டும்தான். குறவர் இன மக்கள் தன்னை நாடி வந்த இரவலர்க்கு உடும்பு, கடமான், முள்ளம்பன்றி தசைகளினால் ஆன கறியையும்

 ISBN Number: 978-93-91115-20-3

தேன் கள் போன்ற பானத்தையும் நெல்லால் வடிக்கப்பட்ட கள்ளினையும் புளியம்பழத்தின் இனிய புளிப்பையும் பசு எருமை இவற்றின் மோரை உலையாக வார்த்து மூங்கில் அரிசியை உலையில் பெய்து துழாவி மணமிக்க சமைத்த உணவை மன மகிழ்ச்சியோடு ஆரவாரத்தோடு அப்பகுதி குழந்தைகள் மற்றும் ஒவ்வொரு வீட்டாரும் தரப் பெறுவீர் என்பதை,

**ஏறித் தருஉம் இலங்குமலைத் தாரமொடு**
**…மக முறை தருப்ப மனை தொறும் பெறுகுவீர்**
**(மலைபடு., பா. 170-185)**

என்று இப்பாடலடிகளும், கோவலர்கள் தங்களிடம் வரும் இரவலர்களை புது விருந்தினர் போன்றெண்ணி தாங்கள் உண்ணும் உணவான பாலில் சமைத்த பால் சோற்றையும் பாலையும் வெண்ணெயையும் கொடுத்து மகிழ்வீர் என்பதை,

**பகர்விரவு நெல்லின் பலஅரி அன்ன**
**…பல்யாட்டு இனநிரை எல்லினீர் புகினே**
**பாலும் மிதவையும் பண்ணாது பெருகுவீர்**
**(மலைபடு., பா. 413-417)**

என்ற இவ்வடிகளாலும் அறியலாம்.

**அன்பு விருந்தோம்பலின் விதிவிலக்கு**

இல்லற மாண்பை எடுத்தியம்பும் விருந்தோம்பலுக்கு நடைமுறை வாழ்வில் விலக்கு

 ISBN Number: 978-93-91115-20-3

ஏற்பட்டிருக்கிறது. எவ்வாறென்றால் கணவனை இழந்தவர்களும் கணவனைப் பிரிந்து வாழ்பவர்களும் விருந்தினரை வரவேற்கும் உரிமை பெற்றிருக்கவில்லை. கோவலனைப் பிரிந்த கண்ணகி விருந்தோம்பலை இழந்ததை எண்ணி கண்ணகி வருந்துவதாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ள செய்தி இங்கு நினைவுகூரத்தக்கது.

**விருந்தாகா**

இன்முகத்தோடு வந்து வரவேற்று விருந்தினரை உபசரித்தலே நல்விருந்து அஃதன்றி இன்முகமின்றி அறுசுவை தரினும் அது நல் விருந்து ஆகா என்பதை, 'ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசரித்து உண்மை பேசி உப்பில்லாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிழ்தமாகும் முப்படிமொடி பால் அன்னம் முகம் கடுத்து இடு தாயின் கப்பிய பசியினோடு கடும்பசி ஆகுந்தானே' என்று விவேக சிந்தாமணி எடுத்தியம்புகிறது.

**முடிவுரை**

மனிதனின் அன்பும் பாசமும் பற்றும் நேசமும் நட்பும் காதலும் தான் இவ்வுலகம் இயங்க வழிவகை செய்கிறது. அதன் வெளிப்பாடாக ஏதோ ஒரு பொருள் அவனுக்குள் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. அவனுக்குள் உணவுப் பரிமாற்றம் செய்து கொள்வதையோ அல்லது உணவைப் படைத்து உபசரிக்கப்படுவதையோ விருந்தாக

 ISBN Number: 978-93-91115-20-3

விருந்தாகக் கொண்டோம். அவ்விருந்து விருந்தினர் விருந்து உபசரிக்கும் தன்மை பற்றி சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருந்த சில கருத்துக்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

**துணையநூற்பட்டியல்**

[1] இளம்பூரணர் (உ.ஆ.). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை, 13ஆம் பதிப்பு-2014.

[2] பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ.). *நற்றிணை.* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, மூன்றாம் அச்சு-2007

[3] விசுவநாதன், அ. (உ.ஆ.). *கலித்தொகை.* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, மூன்றாம் அச்சு-2007.

[4] தட்சிணாமூர்த்தி, அ. (உ.ஆ.). *ஐங்குறுநூறு.* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், மூன்றாம் அச்சு-2007.

[5] செயபால், இரா. *அகநானூறு-1.* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, மூன்றாம் அச்சு-2007.

[6] பாலையன், அ.ப. (உ.ஆ.), *எட்டுத்தொகை (புறநானூறு) மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு-2012.

 **ISBN Number: 978-93-91115-20-3**

[7] நாகராசன், வி. (உ.ஆ.) *பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி (மலைபடுகடாம்).* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, மூன்றாம் அச்சு-2007.

[8] நாகராசன், வி. (உ.ஆ.). *பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி (பெரும்பாணாற்றுப்படை).* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, மூன்றாம் அச்சு-2007.

[9] மோகன், இரா. (உ.ஆ.). *பத்துப்பாட்டு பகுதி-1 (பொருணராற்றுப்படை).* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, மூன்றாம் அச்சு-2007.

[10] மோகன், இரா. (உ.ஆ.). *பத்துப்பாட்டு பகுதி-1 (சிறுபாணாற்றுப்படை).* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், மூன்றாம் அச்சு-2007.

[11] கோதண்டம், கொ.மா. (உ.ஆ.). *திருக்குறள்.* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு-2012.

[12] வேங்கடசாமி நாட்டார்,ந.மு. (உ.ஆ.). *சிலப்பதிகாரம்.* ராமையா பதிப்பகம், சென்னை, 2005.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

 **ISBN Number: 978-93-91115-20-3**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **ISBN Number: 978-93-91115-20-3**

# God's Blessing on the Sense of Love

**Dr. M. R. Majitha Burvin,** Assistant Professor, PG& Center for Tamil Studies, A.P.C.Mahalaxmi College for Women Thoothukudi- 2, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0481-8400**
**DOI: 10.5281/zenodo.8126855**

## Abstract

*The world is bound by the word love. The human beings living in the world are functioning by the movement of love. Love is just a word. That is magic. It has the power to drive man. That love is only human to human. It has created a deep bond between man and God. The deep and soulful feeling of that love with the holy scriptures that the Lord has given us shows that we are living in accordance with the saying 'Love is life'. This article explores the love and devotion emphasized by Islam, Christianity and Hinduism.*

**Keywords:** *Thirukural*, Islam, Christianity, Hinduism, Holy Scriptures, *Holy Quran*, Holy *Bible*, Bhagavad Gita.

## References

[1] Acharya, P.S. *Tirukkural*. Narmada Publishing House, Chennai, 2006.
[2] Asirwadham, R.N. *Holy Bible-Tamil Bible*. Evangelical Ministry Library, Chennai -7, 2003
[3] Chandrasekaran, Ira. *Sanga Ilakiyathil Palantamilarin Soolal Kappunarvu*. Honey Gold Publishing House, Coimbatore, 2011.

 ISBN Number: 978-93-91115-20-3

[4] Tafseer Ibn Ghazir. Tamil Translation of *Holy Quran*. Rahmat Publishing House, 2022.

[5] Bharatiyar. *Bhagavad Gita*. Sandhya Publishing House, Chennai, 2008.

[6] Puliyur Kesigan. *Sanga Ilakiyamum Moola Uraiyum*. Sarada Publishing House, Chennai, 2004.

[7] Manikkavasakan, Jna. Aa. *Thirumoolar Thirumantram* (Source and Explanatory Text) 18 Pavalkarath Street Manadi, Chennai-1, 2013

[8] Varadarasanar, M. Tirukkural Gallurai. Pari Nilayam, 90 Broadway, Chennai-18, 2014.



**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.


**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.



ISBN Number: 978-93-91115-20-3

# இறை உணர்த்தும் அன்புநெறி


**முனைவர் மு. ரா. மஜிதா பர்வின்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை முதுகலை மற்றும் தமிழாய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி - 2, தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0003-0481-8400**



**DOI: 10.5281/zenodo.8126855**



**ஆய்வுச்சுருக்கம்**

*அன்பு என்ற சொல்லால் உலகம் பிணைக்கப்பட்டிருக்கிறது. அன்பின் இயக்கத்தால் உலகில் வாழும் மனிதர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அன்பு என்பது வெறும் சொல் அன்று. அது மந்திரம். மனிதனை இயக்கும் ஆற்றல் சக்தி கொண்டது. அந்த அன்பு மனிதனுக்கு மனிதன் மட்டும் நிகழ்வதன்று. மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் ஆழமாண பிணைப்பை உருவாக்கியிருக்கிறது. அந்த அன்பின் ஆழத்தை ஆத்மார்த்தமான உணர்வை இறைவன் நமக்கு வழங்கியிருக்கும் புனித நூல்களைக் கொண்டு 'அன்பின் வழியது உயிர்நிலை' என்ற வாசகத்திற்கு ஏற்ப நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துரைக்கிறது. இஸ்லாம், கிறித்தவம், இந்து*

*சமயங்கள் வலியுறுத்தும் அன்பையும் பக்தியையும் இக்கட்டுரை ஆராய்கிறது.*

**திறவுச் சொற்கள்:** *திருக்குறள்*, இஸ்லாம், கிறித்தவம், இந்து, இறை வேதங்கள், திருக்குர்ஆன், புனித பைபிள், பகவத் கீதை.

**முன்னுரை**

உலகத்தில் மிக உயர்ந்தது அன்பும் புன்னகையும். அவைதான் பெறுபவனுக்கும் வழங்குபவனுக்கும் அதிக இன்பத்தைக் கொடுக்கிறது. அன்பு என்பது நாம் சுவாசிக்கும் மூச்சுக் காற்று போல அவசியமானது. மரத்தின் பெருமை அதன் உயரத்தால் அல்ல. அது உதிர்க்கும் பழங்களைப் பொறுத்தது. மலரின் பெருமை அதன் நிறத்தில் அல்ல. அது வெளிப்படுத்தும் மணத்தைப் பொறுத்தது. அழும்போது தனிமையில் அழு; சிரிக்கும் போது நண்பர்களோடு சிரி. உன் வேதனை பலரைச் சிரிக்க வைக்கலாம். ஆனால் உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப் படுத்தக்கூடாது. இதனை ஒருவன் வாழ்வில் கைக்கொண்டால் மகிழ்ச்சியாக வாழலாம். நமது வாழ்க்கை ஒரு கணித மேடை போன்றது.

- **நமது நண்பர்களையும், சுற்றத்தாரையும் கூட்ட வேண்டும் (+)**
- **பகைவரை விலக்க வேண்டும் (-)**


ISBN Number: 978-93-91115-20-3

- **நமது சந்தோஷத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் (X)**
- **நம்முடைய துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் (%)**

வாழ்க்கை என்பது சக்கரம் போன்றது. அதில் இறைவனை மையமாக வைத்து அன்பை ஆரமாகக் கொண்டு நாம் வாழ்க்கைப் பயணத்தை தொடர வேண்டும். அன்பினால் தீய குணங்களான கோபம், பொறாமை, அகந்தை ஆகியவை அழிக்கப்படுகின்றன. அன்பு என்ற மூன்றெழுத்தினால் பாசம், பரிவு, உண்மை, பண்பு, கடமை ஆகிய நற்குணங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அன்பினால் சாதிக்க முடியாதது இவ்வுலகில் எதுவுமில்லை என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**இஸ்லாம் போதிக்கும் அன்பு நெறி**

இஸ்லாம் அன்பின், கருணையின் மார்க்கமாகும், அதுமட்டுமல்லாது அமைதி, கட்டுப்பாடு என்ற அர்த்தங்களையும் இஸ்லாம் என்ற பதம் உள்ளடக்கியுள்ளது. இறைவன் தன்னைக் கருணையாளன் அன்பாளனாகவே அறிமுகம் செய்கின்றான்.

**அல்லாஹ்** என்ற சொல்லுக்கு நிகரான சொல்லாக **அர் ரஹ்மான்** எனும் கருணை, அன்பு போன்ற


ISBN Number: 978-93-91115-20-3

அர்த்தங்களை உள்ளடக்கிய சொல்லையே இறைவன் அறிமுகம் செய்கின்றான். **நீங்கள் (அவனை) அல்லாஹ் என்று அழையுங்கள் அல்லது அர்ரஹ்மான்** என்று அழையுங்கள். எப்பெயரைக் கொண்டு அழைத்தாலும் அவனுக்குப் பல அழகிய திருநாமங்கள் இருக்கின்றன. என்று (நபியே) கூறுவீராக. (அல் இஸ்ரா:110) இறைவன் இப்பிரபஞ்சத்தின் அனைத்து படைப்பினங்கள் மீதும் அன்பும் கருணையும் மிக்கவனாகவே இருக்கின்றான். இறைவனுக்கு அடிபணிபவர்கள், மாறு செய்கின்றவர்கள், மீதும் இறைவன் அன்பு செலுத்துவான். இப்பிரபஞ்சத்தின் மிகச்சிறிய படைப்பிலிருந்து மிகப் பிரம்மாண்டமான அனைத்துப் படைப்பினங்களின் மீதும் தனது கருணையையும் அன்பையும் பொழிந்து கொண்டே இருக்கிறான். இதனையே அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

> **என்னுடைய அருளானது எல்லாப் பொருள்களிலும் (விரிந்து, பரந்து) சூழ்ந்து நிற்கிறது (அல்அஃராப்: 156)**

என்ற வசனத்தின் மூலம் தனது அருள் கருணை என்ற பண்பைத் தனது படைப்பினங்களினது உள்ளத்திலும் இறைவன் பதித்துள்ளான்.

இஸ்லாமிய மார்க்கம் என்பது அன்பு, மனித நேயம், ஐக்கியம், சமாதானம், சகவாழ்வு, சகோதரத்துவம்

 **ISBN Number: 978-93-91115-20-3**

போன்ற உயர்ந்த விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றை உலகில் மலரச் செய்து தானும் தன்னைச் சார்ந்தவர்களையும் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ வழியமைத்துக் கொடுப்பதே உண்மையான முஸ்லிமின் பணியாகும். இதனை உணர்ந்த உண்மையான முஸ்லிம் தனது நாவினாலோ கரத்தினாலோ பிற மனிதர்களுக்கு ஒருபோதும் தீங்கிழைக்கக் கூடியவனாக இருக்க மாட்டான்.

இஸ்லாம் அன்பைப் போதிக்கிறது, அது மனித நேயத்தை இறைச்செய்திகளினூடாக மனிதர்களுடைய உள்ளங்களில் விதைக்கின்றது. பிறரை நேசிப்பது, அன்பு கொள்வது போன்ற உயர்ந்த குணங்களுடன் பிறருக்குத் தொந்தரவில்லாமல் வாழ்ந்தால் மட்டுமே சுவனம் செல்லமுடியும் என்ற நம்பிக்கையை இஸ்லாம் மனிதர்களுக்கு அதன் அடிப்படைக் கொள்கையாகக் கற்றுக் கொடுக்கின்றது.

இஸ்லாம் உலக மக்களுக்குரிய பொதுவான மார்க்கமாகும். அது உலக அமைதிக்கும் மறுமலர்ச்சிக்கும் வழிகாட்டிக் கொண்டே இருக்கும். அதேபோன்று இஸ்லாம் மனிதர்களை மனிதர்களாகப் பார்க்கின்றது. பிற மனிதர்களின் உயிர்கள், உரிமைகள், உணர்வுகள், உடமைகள், சொத்துகள் போன்றவற்றில் தேவையின்றி உள்நுழைவதையும் அவற்றுக்குப் பங்கம்

 ISBN Number: 978-93-91115-20-3

விளைவிப்பதையும் மிகப்பெரும் குற்றச் செயலாக இஸ்லாம் கருதுகின்றது.

> **மக்களே! உங்கள் இறைவன் ஒரே ஒருவன்தான். உங்களுடைய தந்தை ஒருவர்தான். ஓர் அரபிக்கு அரபியல்லாதவரை விடவும் ஓர் அரபியல்லாதவருக்கு அரபியரை விடவும் ஒரு கறுப்பருக்கு சிவப்பரை விடவும் ஒரு சிவப்பருக்கு ஒரு கறுப்பரை விடவும் எந்தச் சிறப்பும் இல்லை இறையச்சத்தைத் தவிர! (திருக்குர்ஆன்)**

என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மனிதர்களை மனிதர்களாக மதிப்பதும் அவர்களது உணர்வுகளை மதிப்பதும் எவ்வகையிலும் ஒருவர் மற்றொருவரைக் காயப்படுத்தாமல் இருப்பதை இஸ்லாம் மனிதர்களுக்கு போதிக்கின்றது. தன்னைச் சபித்தவர்கள், தனக்கெதிராகச் சதிமுயற்சி செய்தவர்களைக்கூட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அன்பாகவும் பண்பாகவுமே அணுகினார்கள்.

அஸ்ஸலாமு அலைக்கும் (உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்) என்று சொல்வதற்குப் பதிலாக, **அஸ்ஸாமு அலைக்கும் (உங்களுக்கு மரணம் உண்டாகட்டும்)** என்று நேருக்கு நேராக நபிகளாரை சபித்தவர்கள்தான் அந்த யூதர்கள். எனினும் நபிகளார் அவர்களுடனும் அன்பாகவே நடந்து கொண்டார்கள்.


**ISBN Number: 978-93-91115-20-3**

தனக்குத் தொந்தரவளித்தவர்களுடனும் அன்பாக நடந்துகொண்ட நபிகளார், மக்களிடையே இஸ்லாத்தின் உண்மையான முகத்தைக் காட்டுவதற்கும் அதனை மக்களிடையே கொண்டு சேர்ப்பதற்கும் எடுத்துக்கொண்ட உயர்ந்த வழி அன்பு. கருணைக்கும் அன்பிற்கும் ஓர் உருவாய் நபிகள் பெருமகனார் திகழ்ந்தார்கள்.

> **அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர் (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள். (அல்-குர்ஆன் 3: 159)**

என்ற வசனத்தின் மூலம் நிரூபணமாகிறது. இவ்வுலகில் அன்பினால் எதையும் சாதிக்கலாம்.

> **மென்மை ஒரு காரியத்தில் இருந்தால் அதனை அது அழகுபடுத்தும். ஒரு காரியத்திலிருந்து அது (மென்மை) மாறுபட்டுவிட்டால் அது அதனைக் அசிங்கப்படுத்திவிடும்**

என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)) இவ்வசனத்தின் மூலம் நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவெனில்

 ISBN Number: 978-93-91115-20-3

மென்மையான முறையில் கனிந்த சொற்களில் அன்போடு ஒரு காரியத்தை நடத்திச் செல்லும்போது அதன் பயன் நமக்கு இரட்டிப்பாகக் கிடைக்கும். இல்லையெனில் அக்காரியங்கள் சிதைந்து போவதற்கும் வாய்ப்பு உண்டு என்ற கருத்தினை மிக அழகாக உணர்த்துகிறது.

ஆவேசம், ஆத்திரம், தொலைநோக்கின்றி செயல்படுதல், நிதானமிழத்தல், கரடு முரடான வார்த்தைப் பிரயோகங்கள், வரம்பு மீறிய விமர்சனங்கள், வீணான குதர்க்கங்கள், சந்தேகத்துக்கிடமான முறையில் செயலாற்றுதல், பீதியைக் கிளப்பி விடுதல், சர்ச்சைக்குரிய காரியங்களில் தலையிடுதல் போன்ற விடயங்களை தவிர்க்கவும் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்வதற்கும் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் சுபிட்சத்தையும் மேலோங்கச் செய்வதற்கும், நிதானமும் விட்டுக் கொடுப்பும் சகிப்புத் தன்மையும் மென்மையும் பொறுமையும் நற்செய்தி கூறுதலும், அன்பாக அணுகுதலும் அத்தியவசியமானவை ஆகும். இவைதான் நபிகள் பெருமகனார் உலகிற்குக் காட்டிய வழியாகும். நற்செய்தி கூறுதல், அன்பாக அணுகுதல், மென்மையைக் கடைப்படித்தல், நிதானப்போக்கை கையாளுதல், இலகுபடுத்துதல், நடுநிலையாகச் செயற்படுதல், வரம்பு மீறாதிருத்தல், எச்சந்தர்ப்பத்திலும் பிறருக்குத் தீங்கிழைக்காமலிருத்தல்

 ISBN Number: 978-93-91115-20-3

போன்ற விடயங்கள் தான் முஸ்லிமின் அடையாளங்களாகும். ஒரு முஸ்லிம் இத்தகைய குணங்கள் மூலமே தன்னை ஒரு முஸ்லிம் என்று உலகிற்கு அடையாளப்படுத்த முயற்சிக்க வேண்டும். இப்படிப்பட்ட அழகிய பண்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு முஸ்லிமாக வாழ்பவர் தான் வாயால் தஃவா செய்யா விட்டாலும் தனது வாழ்க்கையையே பிற மனிதர்களுக்குரிய மிகப்பெரும் தஃவாவாக அமைத்துக் கொண்டவராவார்.

நபிகள் பெருமகனார் மனிதர்கள் சக மனிதர்களிடம் மட்டுமல்லாது அனைத்து உயிரினங்களிடத்திலும் அன்பும் பரிவும் காட்டுவதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார். அன்றைய அரேபியர்களிடம் காணப்பட்ட ஜீவகாருண்யத்திற்கு எதிரான அனைத்துச் செயல்களையும் நபிகளார் தடுத்தார்கள். முந்தைய காலங்களில் அரேபிய நாட்டில், அரேபியர்கள் அம்பெறிந்து பழகுவதற்கு உயிரினங்களையே இலக்காகக் கொண்டனர். இந்தச் செயலை நபிகளார் தடுத்ததுடன், இவ்வாறு செய்பவர்களைச் சபிக்கவும் செய்திருக்கிறார்கள். இச்செய்தியின் வழியாக உலக உயிர்கள் அனைத்தையும் மனிதர்கள் துன்புறுத்தாமல் அவற்றைப்

 ISBN Number: 978-93-91115-20-3

பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அறிவுரையைப் பகர்கின்றார்.

அன்றைய காலகட்டங்களில் விருந்தினர்கள் வந்தால் முழு ஒட்டகத்தையும் அறுக்க முடியாது. குறைந்த அளவு மாமிசம் வாங்க முடியாது என்ற நிலையில் அன்றைய அரேபியர்கள் உயிருடன் உள்ள ஒட்டகத்தில் ஒரு துண்டு இறைச்சியை வெட்டி எடுத்துச் சமைப்பார்கள். வெட்டப்பட்ட இடத்தில் மருந்து தடவி கட்டுப் போட்டு விடுவார்கள். அந்த ஒட்டகம் வலியையும் வேதனையையும் தாங்கிக் கொண்டு கண்ணீர் சிந்தும். இந்தச் செயலை நபிகளார் வன்மையாகக் கண்டித்ததோடு, இவ்வாறு பெறப்பட்ட மாமிசத்தைப் புசிப்பதும் **ஹராம்** (விலக்கப்பட்டது) என்றார்கள். எந்த ஓர் உயிரையும் அது மூட்டைப் பூச்சியாக இருந்தாலும் நெருப்பிலிட்டுப் பொசுக்கக் கூடாது என்றும், எந்த உயிரையும் தண்ணீரில் மூழ்கச் செய்து, மூச்சு முட்ட வைத்து சாகடிக்கவும் கூடாது என்றும் இஸ்லாம் வழிமுறைகளை வகுத்துள்ளது. இனவிருத்தி செய்கின்ற பெண் இனத்தை அறுத்துப் புசிக்கலாகாது' என்பது நபிமொழி. வேறு வழி இல்லாத நிலையில் மட்டுமே பெண்ணின விலங்குகளின் இறைச்சியை உண்ணலாம் என்பதை இதன் மூலம் அறியலாம். இன்று கூட இஸ்லாமியத் திருமணங்களிலோ, விருந்து

 ISBN Number: 978-93-91115-20-3

நிகழ்ச்சிகளிலோ கிடாய்களே அறுக்கப்படுகின்றன. இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஊர்களில், பெண் ஆட்டை அறுக்கத் தடை உள்ளது.

ஆடு, மாடுகளை அறுப்பதில்கூட இஸ்லாம் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. பிராணிகளை அறுக்கும்போது நன்கு கூர்மையான கத்தியைக் கொண்டு, அல்லாஹ்வின் பெயர் கூறி விரைவாக அறுத்தல் வேண்டும். கத்தியை அந்தப் பிராணி காணும்படி வைத்துக் கொள்ளவோ அல்லது அது பார்க்கும்படி கத்தியைத் தீட்டுவதோ கூடாது. வேறு மிருகங்கள் பார்த்திருக்கும் நிலையில் அதை அறுக்கக் கூடாது என்று இஸ்லாம் பல கட்டுப்பாடுகளை வகுத்திருக்கிறது.

அல்லாஹ்வின் அருளை, கருணையை (ரஹ்மத் எனும் பண்பை) நூறு பகுதிகளாகப் பிரித்துத் தொண்ணூற்றி ஒன்பது பகுதியைத் தன்னிடம் வைத்துக் கொண்டான். ஒரு பகுதியைப் பூமிக்கு இறக்கி வைத்தான். அதன் விளைவாகவே படைப்பினங்கள் தமக்கிடையில் பரஸ்பரம் அன்பு, கருணை காட்டிக் கொள்கின்றன.

**ஒரு மிருகம் தனது குட்டியை மிதித்துவிடாது தனது காலை உயர்த்திக் கொள்வதும் இதன் வெளிப்பாடே (புஹாரி)**

 ISBN Number: 978-93-91115-20-3

வன்மத்தையும் வன்முறையையும் அனைத்து விடயங்களிலிருந்தும் தவிர்ப்பது மிக அவசியமாகும், வன்முறையானது இஸ்லாம் வெறுக்கின்ற, தடுக்கின்ற ஒரு பண்பாகும். மனிதர்களாக இருக்கலாம் விலங்கினமாக இருக்கலாம் அல்லது ஏனைய எந்தப் படைப்பினமாகவும் இருக்கலாம் அவை அனைத்துடனும் அன்புடனும் கருணையுடனுமே நடந்துகொள்ள வேண்டும், ஒவ்வொன்றுக்கும் இறைவன் கொடுத்த உரிமைகளைப் பாதுகாப்பது அவசியமாகும், அவற்றின் உரிமைகளைப் பறிப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது.

உலகம் நிலைபெற்று நீடுவாழ்வதற்கு அன்பு தலையாய ஒன்று. பிற உயிர்களிடத்து அன்பு செலுத்தி அரவணைத்து வாழுகின்ற வாழ்க்கையில் அனைத்து உயிர்களும் இன்பம் எய்துகிறது.

> **கிறித்தவம் போதிக்கும் அன்பு நெறி உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல் சக மனிதர்மீதும் அன்பு காட்ட வேண்டும் (மத். 22: 39)**

என்கிறார் இயேசு பெருமகனார். உன் கடவுளாகிய யெகோவாமீது உன் முழு இருதயத்தோடும் உன் முழு மூச்சோடும் உன் முழு மனதோடு அன்பு காட்ட வேண்டும். அன்பு வேண்டும். அதுவும் தூய அன்பு வேண்டும். தேவனிடத்திலும் சக மனிதரிடத்திலும்

 **ISBN Number: 978-93-91115-20-3**

உள்ளன்போடு கூடிய பேரன்பு வேண்டும் என்று பைபிளில் கூறப்பட்டுள்ளது.

> **மற்றவர்கள் உங்களுக்கு எதையெல்லாம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்ய வேண்டும்; சொல்லப்போனால், திருச்சட்டத்தின் சாராம்சமும் தீர்க்கதரிசனப் புத்தகங்களின் சாராம்சமும் இதுதான். (மத். 7: 12)**

என்று பைபிள் கூறுகிது. மற்றவர்களிடமிருந்து நன்மைகளையும் உதவியையும் விரும்புகின்ற நீங்கள் அதையே பிறருக்குச் செய்யுங்கள் என்கிறார் இயேசு பெருமகனார். அதோடு மட்டுமல்லாமல் எல்லோருடைய அன்பையும் பெற நினைக்கும் நீங்கள் அதனைப் பிறருக்குக் கொடுக்கவும் வேண்டும் என்கிறார். எனவே அன்பைப் பெற நினைப்பது மட்டுமல்ல, கொடுக்கவும் வேண்டும் என்று கூறுகிறது. நிபந்தனையில்லாத அன்பு நிலையான வாழ்வைப் பெற்றுத்தரும். நிபந்தனை இல்லாத அன்பு கடவுளுக்குச் செலுத்தும் காணிக்கை. உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் முழு மனதோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்புகூறுங்கள் என்று பைபிள் வலியுறுத்துகிறது. உன்மீது நீ அன்பு கூறுவது போல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூறுவாயாக

 **ISBN Number: 978-93-91115-20-3**

என்பதும் உன்னை ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைத் திருப்பிக்காட்டு என்று அன்பின் ஊற்றாகக் கருணையின் வடிவமாக இயேசு பெருமகனார் வாழ்ந்துவிட்டுச் சென்றிருக்கிறார். அதுவே நமக்கு மிகச்சிறந்த படிப்பினை.

இறைவனையும் தன்னோடு வாழக்கூடிய சகோதர, சகோதரியையும் எப்படி அன்பு செய்யவேண்டும் என்பதற்கு இயேசு பிரான் சொல்லும் உவமைதான் நல்ல சமாரியன் உவமை. நல்ல சமாரியன் உவமை வெறும் உவமை மட்டுமல்ல, எருசலேமிலிருந்து எரிக்கோ வரை அன்றாடம் நடைபெறக்கூடிய நிகழ்வுதான். அப்பகுதி இன்றைக்கும் கொலை மற்றும் கொள்ளைக்குப் பெயர் போன இடமாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தின் வழியாகச் செல்லக்கூடிய ஒரு யூதரைத்தான் கள்வர்கள் பிடித்து அடித்து அவரிடமிருந்ததை எல்லாம் கவர்ந்துகொண்டு அவரைக் குற்றுயிராகப் போட்டுவிட்டு அங்கிருந்து சென்று விடுகிறார்கள். அப்போது அந்த வழியாக ஒரு குரு வருகிறார். அடிபட்டுக் கிடப்பவரைக் கண்டும் காணாமல் போகிறார். அவரைத் தொடர்ந்து ஒரு லேவியர் வருகிறார். அவரும் அடிபட்டுக் கிடப்பவரைக் கண்டும் காணாமல் போகிறார். ஆனால், கடைசியில் வரும் சமாரியரோ அவருக்குச் சிகிச்சை அளித்து, அவரைச் சாவடிக்குக் தூக்கிக்கொண்டு சென்று,


**ISBN Number: 978-93-91115-20-3**

அவருக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்கிறார். இவ்வாறு அந்தச் சமாரியர் அடிபட்டுக் கிடப்பது தன்னுடைய எதிராளியான யூதராக இருந்தாலும் அவருக்கு எல்லா உதவிகளையும் செய்து, அவருடைய உயிரைக் காப்பாற்றுகிறார். இதன்மூலம் ஒருவரை எப்படி அன்பு செய்யவேண்டும் என்பதற்கு அவர் மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார்.

நம்மோடு வாழக்கூடிய அனைவரையும் சகோதர சகோதரிகளாகப் பாவித்து நிபந்தனை இல்லாமல் அன்பு செய்யும்போது வாழ்வில் இன்பமும் மகிழ்ச்சியும் பெருகும். ஆகவே, ஒருவர் மற்றவரை எந்தவொரு நிபந்தனையும் இல்லாமல் அன்புசெய்து, கடவுளையும் அன்பு செய்பவர்களாக வாழ்வோம்.

> **நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையிருக்கிறது. (யோவான் 15: 12)**

என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் மற்றவர்கள் மீது எப்படி அன்பு செலுத்த வேண்டும் என்பதைப் பைபிள் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

இயேசுபெருமகனார் மேற்கண்ட வசனத்தில் நம்மை பிறர்மேல் அன்பாயிருக்கச் சொன்னது மாத்திரமல்லாமல் அதைக் கட்டளையாய் கைக்

 ISBN Number: 978-93-91115-20-3

கொள்ளவும் வலியுறுத்துகிறார். இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்த போது தன்னலமற்ற, தெய்வீக அன்பை மனிதகுலத்திற்கு வெளிப்படுத்தினார். அவருடைய அன்பில் இரக்கமிருந்தது, சாந்தமிருந்தது, பொறுமையிருந்தது, அனைத்திற்கும் மேலாகப் பிறரை மன்னிக்கும் தன்மை இருந்தது. இறுதியில் அவர் மனிதகுலத்திற்குத் தன் ஜீவனையே பலியாகக் கொடுத்தார். ஒருவன் சகல அறிவையும், வரத்தையும் உடையவனாயிருந்து, அன்பு அவனுக்கு இல்லாமல் போனால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பான் என்றும், ஒருவன் தனக்குச் சொந்தமான அனைத்தையும் அன்னதானம் பண்ணினாலும், தன் சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்தாலும் அன்பு அவனிடம் இல்லை என்றால், அதில் அவனுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. மேலும் அன்புக்குப் பொறாமை இல்லை, அன்பு தன்னைப் புகழாது. இறுமாப்புக் கொள்ளாது. சினமடையாது. தீங்கு நினையாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். அன்பு சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் நம்பும் என்று பைபிள் அன்பைப் பற்றித் தெளிவாகச் சொல்கிறது.

## இந்து சமயம் போதிக்கும் அன்பு நெறி

**அன்பும் சிவனும் இரண்டென்பர் அறிவிலார்**


ISBN Number: 978-93-91115-20-3

**அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்**
**அன்பும் சிவமும் ஒன்றென்று அறிந்தபின்**
**அன்பேசிவமாய் அமர்ந்து இருந்தாரே**
**(திருமந்திரம் 270)**

பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிர்களிடத்திலும் அன்பு எனும் வடிவத்தில் இறைவன் இருக்கிறான். இது தான் இந்து சமயத்தின் கொள்கை. மனிதர்கள் சக உயிர்களிடத்து செலுத்தும் அன்பில்தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றிய அனைத்து மதங்களும் அன்பைப் பெரிதும் போற்றுகின்றன. இதைத்தான் தெளிவாகத் திருமூலர் நீங்கள் பிறர் மீது அன்பு செலுத்தினால் இறைவன் உங்கள் மீது அன்பு செலுத்துவார் என்று வலியுறுத்துகிறார். அன்பின் மூலம் அன்பு வளரும். வெறுப்பு ஒரு குறுகிய கூட்டுக்குள் சதிராடுகிறது. அன்பு வானைப் போல் அறிவை வளரச் செய்கிறது.

கடவுள் என்பவர் ஒருவர்தான். மனிதர்கள் போகும் பாதைகள் வேறானாலும் பயணத்தின் முடிவு ஒன்றுதான். ஆனால் ஒவ்வொருவருடைய வழிபாட்டு முறை தான் வேறுபடுகிறது. இது தான் மதங்களை உருவாக்குகிறது. இந்த வழிபாட்டு முறையானது மக்களுடைய கலாச்சாரம், பண்பாடு, அவர்கள் வாழும் புவிப்பரப்பியல், தட்பவெப்ப நிலைகள் போன்றவையும் முக்கியக் காரணங்களாக


ISBN Number: 978-93-91115-20-3

அமைந்து விடுகின்றன. ஒரு மாடியின் உச்சிக்குப் போக ஏணி, மூங்கில், படி, கயிறு இவற்றில் ஏதேனும் ஒன்றன் உதவியைக் கொண்டு ஏறலாம். அதுபோல இறைவனை அடைவதற்கு ஒவ்வொரு மதமும் வித்தியாசமான மார்க்கங்களைக் காட்டுகிறது. ஓர் ஏரியின் நீரைப்போல் இறைவனும், அதில் இறங்கும் படித்துறைகள் போன்றது மதம் என்பது.

**நீ வீட்டு எஜமான்: உன் மனைவிக்குக் கணவன்; மகனுக்குத் தகப்பன்: வேலைக்காரனுக்கு எஜமான் ஆனால் நீ ஒருவன் தான். (இராமகிருஷ்ண பரமஹம்சர்)**

**அவரவர்உன்னிடம் கொண்ட உறவு முறையைவைத்து உன்னைப் பார்ப்பது போல், பல மதத்தவரும் ஆண்டவனைப் பல விதத்தில் பார்க்கிறார்கள். (இராமகிருஷ்ண பரமஹம்சர்)**

இது இந்து மதத்தின் விரிந்த ஞானத்தை எடுத்துக்காட்டுகிறது. சகிப்புத் தன்மையையும், அரவணைப்பையும் இந்து மதம் வலியுறுத்துகிறது. **உடலில் பட்ட காயம் மாறிவிடும் ஆனால் மனதில் பட்ட காயம் மாறாது ஆகவே யாரையும் நீ புண்படுத்தாதே** என்கிறது இந்து தர்மம். **ஒன்றே குலம் ஒருவனே தேவன்** என்பதற்கிணைங்க அனைவரையும் சமமாய் மதிப்போம். அன்பு செலுத்துவோம்.

 ISBN Number: 978-93-91115-20-3

## இலக்கியங்கள் காட்டும் அன்பு நெறி

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது (குறள்-45)**

என்பது வள்ளுவர் வாக்கு. இல்லறம் நல்லறமாக அன்பு இன்றியமையாதது. அன்பினால் கிடைக்கக்கூடிய பலன்கள் எண்ணிலடங்கா. நமது ஆற்றல், மன வலிமை, உடல் வலிமை, அறிவாக்கம் இவற்றுக்கு உறுதுணையாக நிற்பது அன்பே. இந்த உலகத்தைச் செலுத்தும் சக்தி அன்பு மட்டும்தான். பலவிதமான மனித உறவுகளிடமும் நாம் எதிர்பார்ப்பது அன்பை மட்டும்தான். இன்பமும் துன்பமும் நிறைந்த நம் வாழ்க்கையில் நமக்கு ஒரே ஆறுதல் பிறர் நம் மீது செலுத்தும் அன்பு மட்டும்தான். ஒருவரது வாழ்க்கை சந்தோசமாகப் போகும்போது அவன் உற்றார், உறவினர்கள், உடனிருப்போர் என்று யாரையும் மதிப்பதில்லை. அதே நேரத்தில் அவனுக்குத் துன்பம் வரும் போது அதே மனம்தான் தன் சொந்தபந்தங்களை உற்றார் உறவினர்களை என்று தேடி அலைகின்றது. பிரச்சினைகள் உள்ளபோதும், பிரச்சினைகளைப் பிறரிடம் சொல்லும்போதும், நமக்கு நாமே பாதுகாப்பாக உணர வைப்பது அன்பெனும் பெருவுணர்வுதான்.

இன்றைய சமுதாயத்தில் மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதும் அன்புதான். வயது முதிர்ந்தோருக்கு மறுக்கப்படும் அன்புதான் சமூகத்தில்


**ISBN Number: 978-93-91115-20-3**

இன்று மிகப்பெரிய பிரச்சினையாகத் திகழ்கின்றது. உடலில் வலுவிருக்கும்வரை உடம்பை வருத்தி உழைத்துப் பிள்ளைகளை அன்போடு பராமரித்து வளர்த்து ஆளாக்கி விடுகின்றனர். அத்தகைய பெற்றோரை வீட்டைவிட்டு துரத்துவதும் அடித்துத் துன்புறுத்துவதும், வீதியில் விட்டு விடுவதும் முதியோர் காப்பகங்களில் விட்டுச் செல்வதும் நடந்தேறி வருகின்றது. நம் மீது ஒட்டுமொத்த அன்பையும் பாசத்தையும் பொழிந்த பெற்றோருக்கு நாம் அதே அன்பை அக்கறையை அரவணைப்பைத் திருப்பிச் செலுத்தாமல் புறக்கணிக்கிறோம் ஆனாலும் அவர்களின் அன்பு மட்டும் பிள்ளைகளின் மீது குறைவதேயில்லை. இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை **அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்** என்கிறார்.

வயது இருக்கும் வரை யாரையும் தேடாத அவர்களின் மனம் வயதானவுடன் தன் மகனோ அல்லது மகளோ தன்னை அன்பாகவும் பாசமாகவும் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றனர். அவர்கள் தங்கள் பிள்ளைகளிடம் விரும்பும் அன்பை மட்டுமே. ஆனால், இன்று பெரும்பாலான வீடுகளில் உள்ள முதியோர்களுக்கு அவர்கள் விரும்பும் அன்பு கிடைப்பதில்லை. அவர்கள் ஒரு சுமையாகவே கருதப்படுகின்றனர். இதற்குச் சான்றாக உண்மையில்

 ISBN Number: 978-93-91115-20-3

நடந்த சம்பவத்தை நாம் அனைவரும் நாளிதழ்களில் படித்திருப்போம்.

தினமும் செய்தித்தாளில் ஏதோ ஒரு பக்கத்தில் இந்த மாதிரியான செய்தியை நாம் படித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். சமீபத்தில் மூதாட்டி ஒருவர் தன் சொந்தப் பிள்ளையால் கைவிடப்பட்டு பஸ் நிறுத்தத்தில் விட்டுவிட்டு இரக்கமே இல்லாமல் வீடு வந்து விட்டனர். தன் மகனிடம் அந்தத் தாய் கேட்டது காசோ, பணமோ இல்லை. பாசத்தை மட்டும்தான். கடைசிக்காலம் வரை தன் மகனோ அல்லது மகளோ தன்னைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மட்டும்தான். அந்தத் தாயிடம் உள்ளது. அன்பு என்ற வார்த்தை ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்த வார்த்தை. இதுதான் அன்பு என்று யாராலும் வரையறுத்துச் சொல்ல இயலாது. அன்பு, பாசம், காதல், நட்பு என்று பல்வேறு பெயர்களில் நாம் பார்த்தாலும் எல்லாமே அன்பு என்பதைத்தான் மையப்படுத்துகிறது. ஒரு மனிதன் தன் தாயையோ அல்லது உறவினர்களையோ நேசித்தால் "அது பாசம்" என்றாகிறது. அதுவே தன் காதலியிடமோ அல்லது காதலனிடமோ அன்பாய் இருந்தால் அதை "காதல்" என்கிறோம். தன்னைச் சுற்றி உள்ளவர்களிடமோ அல்லது நண்பர்களிடமோ செலுத்தினால் அது "நட்பு"


**ISBN Number: 978-93-91115-20-3**

என்றாகி விடுகின்றது. ஆகவே காதல், அன்பு, பாசம், நட்பு என்று பல பெயர்களில் பார்த்தாலும் அது “அன்பு” என்ற ஒற்றைச் சொல்லில்தான் உருவாகிறது என்பதை மனிதர்களாகிய நாம் மறந்து விடக்கூடாது. அன்பு ஓர் அபூர்வமான சக்தி. உயிரின் உறைவிடமே அன்பு. வள்ளலார் போதித்த சுத்த சன்மார்க்கத்தின் அடிப்படை அம்சம் எல்லா ஜீவராசிகளிடத்தும் அன்பு காட்டுதல்

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே (வள்ளலார்)**

என்று மிக அழகாகப் பாடுகிறார் வள்ளலார். எங்காவது மலை கைப்பிடியில் அகப்படுமா? அன்பு என்னும் கைப்பிடியில் இறைவன் என்ற மலையும் அகப்படும் என்கிறார். குடிசையே ஆனாலும் அன்பிருக்குமானால் அரசனும் விரும்பி நுழைவான் என்கிறார். இதனையே வள்ளுவர் பெருமான்

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. (குறள் - 45)**

இல்வாழ்க்கைக்கு அன்பே அச்சாணி. அன்பே இனிமை. செல்வந்தருக்கும் ஏழை எளியோருக்கும் இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் தேவை என்கிறார். **அன்பு உடையார் என்பும் உரியர் பிறர்க்கு** என்பதன் மூலம் வள்ளுவர்


ISBN Number: 978-93-91115-20-3

அன்பு தம் பொருளையும் உடலையும் விட எலும்பையும் பிறருக்குக் கொடுக்க வல்லது என்கிறார். இத்தகைய அன்பு ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது. மெய்யுணர்வு சம்பந்தப்பட்டது. சுவாமி விவேகானந்தர்,

> **ஒருவனிடம் அன்பு குடிகொண்டிருக்குமேயானால் அது பிறரிடம் எதையும் கேட்காது. மாறாக அன்பு அனைத்தையும் கொடுத்து விடுகிறது. தன்னையே பிறர்க்கும் நல்கும் பேராற்றல் இந்த அன்பினால் முடியும்**

எனச் சொற்பொழிவொன்றில் எடுத்து இயம்பியுள்ளார்.

- **அன்பு சாந்தமானது.**
- **அன்பிற்குப் பொறாமையில்லை.**
- **அன்பு தன்னைப் புகழாது.**
- **இறுமாப்பாயிராது.**
- **அயோக்கியமானதைச் செய்யாது.**
- **தற்பொழிவை நாடாது.**
- **சினமடையாது.**
- **தீங்கு நினையாது.**
- **சத்தியத்தில் சந்தோஷப்படும்.**
- **சகலத்தையும் தாங்கும்.**
- **சகலத்தையும் விசுவாசிக்கும்.**
- **சகலத்தையும் நம்பும்.**
- **சகலத்தையும் சகிக்கும்.**


**ISBN Number: 978-93-91115-20-3**

- **அன்பு ஒருக்காலும் ஒழியாது.**

இதை நாம் அன்பின் இலக்கணங்களாகக் கொண்டு வாழ வேண்டும். செல்வாக்குள்ள மனிதனாக இருப்பதைவிட அன்புள்ள மனிதனாக இருப்பதே சிறந்தது. அன்புள்ளம் படைத்தவன் உலகம் மகிழ வழிகாட்டியாக விளங்குவான். அன்பின் அடிப்படையில் மனித வாழ்வு அமைந்திருக்குமானால் அமைதியிருக்கும். மகிழ்ச்சி நிலவும் உயர்வு தாழ்வு சிந்தனைகள் எழாது.

**அன்பு வழி வாழ வேண்டும்!**

**அவ்வழியே வளரும் வாழ்கை !**

**அன்பெனும் உணர்வு**

அன்பு என்ற உணர்வு, உன் மனதிலிருந்து எழ வெண்டும். சந்தோசத்தை விரும்புவதும், கடவுளிடம் அன்பாக இருப்பதும், தாயை நேசிப்பதும், காதலிப்பதும் உணர்வுப் பூர்வமாக செயல்படுத்த வேண்டும். மனிதனின் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு தரக்கூடிய ஒரே மருந்து அன்பு ஒன்றுதான். இவ்வுலகில் அன்பு ஒன்றுதான் அனாதை. ஆனால் இதில் என்ன பிரச்சினை என்றால் அன்பாக இருப்பது எப்படி? என்பதை நாம் இன்று வரை உணராமலிருப்பதுதான்.

அன்பை நாம் எப்படி உணரப் போகிறோம், அன்பாக இருப்பதுதான் அன்பு என்று நாம் எப்போது உணரப் போகிறோம், பலரிடமும் நாம் அன்பாக


ISBN Number: 978-93-91115-20-3

இருக்கிறோம் என்று சொல்கிறோம், பேசுகிறோம். ஆனால், உண்மையிலேயே நாம் அனைவரிடமும் அன்பாகத்தான் இருக்கிறோமா, காலையில் இருந்து மாலை வரை பல மனிதர்களிடம் பேசுகிறோம். சிரிக்கிறோம். சந்திக்கிறோம். ஆனால் நாம் அனைவரிடமும் உள்ளன்போடுதான் சிரித்துப் பேசுகிறோமா? நம்முடைய உதடுகள் மட்டுமே புன்னகை செய்கிறது. உள்ளம் என்பது புன்னகை செய்ய மறுக்கிறது. ஏன் நம் மனதில் உள்ளன்பு இல்லை? என்பதைச் சொல்லாமல் சொல்கின்றது. பொய்யாகச் சிரித்து போலியாகப் புகழ வேண்டிய கட்டாயத்தில் அனைவரின் வாழ்க்கைச் சக்கரமும் ஓடிக் கொண்டிருக்கின்றது. ஏதோ ஒன்றை எதிர்பார்த்து அன்பு செலுத்தினால் உண்மையான அன்பை நாம் யாரிடமும் பெற முடியாது. மனம் நிறைந்த அன்பு மட்டுமே நல்ல பலனைத் தரும். உள்ளன்போடு செய்யும் எந்தச் செயலும் மனமகிழ்வைத் தரும். இதனை ஒரு கதையின் மூலம் புத்தர் விளக்குகிறார்.

ஒருவன் வயல்வரப்பு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது எதிரே வரும் புலியைப் பார்த்து விட்டான். அவனைப் புலி துரத்த ஓட ஆரம்பித்தான். சிறிய குன்றின் உச்சிக்கு வந்து விளிம்பில் இருந்த காட்டு மரத்தின் வேர்களைப் பிடித்துக் கொண்டு

 ISBN Number: 978-93-91115-20-3

தொங்கினான். புலி அவனை முகர்ந்து பார்த்துக் கொண்டிருந்தது. நடுங்கிக் கொண்டே கீழே பார்த்தான். இன்னொரு புலி பார்த்துக் கொண்டிருந்தது. மரத்தின் வேர்களில் அவனது உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. இதற்கிடையே இரண்டு எலிகள் மரத்தின் வேர்களைக் கடிக்க ஆரம்பித்தன. அவனுக்குக் கைக்கெட்டும் தூரத்தில் காட்டுச் செடியில் பழம் இருந்தது. ஒரு கையால் வேரைப் பிடித்துக் கொண்டு மறு கையால் பழத்தைப் பறித்துத் தின்றான். அப்போது அவன் மனதில் “பழம் எவ்வளவு சுவையாக இருக்கிறது” என்று தோன்றியது. இக்கதையில் வருகிற கனியைச் சுவைக்கும். மனநிலைதான் அன்பின் மூலம் நாம் அடைவது. ஆகவே எவ்வளவு துன்பங்கள், பிரச்சினைகள் இருப்பினும் அதனை மறந்து விடச் செய்வது பிறர் நம் மீது காட்டும் அன்பு மட்டுமே. அன்பிற்கு மட்டுமே வாழ்வை இனிமையாக நகர்த்திச் செல்கின்ற சக்தி உண்டு என்பதை இக்கதையின் மூலம் புத்தர் நமக்குப் புரிய வைக்கின்றார். ஒருவன் நான் கடவுளிடம் அன்பாக இருக்கிறேன் என்கிறான். உண்மையிலேயே அவன் அன்பாகத்தான் இருக்கின்றானா? இல்லை.

வாழ்க்கை இன்பமாகப் போகும் போது நாம் இறைவனை நினைப்பதில்லை. கேட்டால் கோவிலுக்குச் செல்ல நேரமில்லை என்கிறோம். இல்லையென்றால்


**ISBN Number: 978-93-91115-20-3**

வேறு ஏதாவது காரணங்களைச் சொல்கிறாம். அதே மனிதன் துன்பத்தில் இருக்கும் போது தினமும் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுகிறான். இறைவா! நீ என் துன்பத்தைப் போக்கு. நான் உனக்குப் பூசை செய்கிறேன் என்கிறான். கடவுளிடமும் அவனது சுயநலம் வெளிப்படுகிறது. நீ இதைக் கொடு, நான் அதைத் தருகிறேன் என்று பேரம் பேசுகிறானே தவிர கடவுளிடம் கூட உள்ளன்போடு வேண்டுவதில்லை.

**முடிவுரை**

உயிர்களிடத்து அன்பாக இருப்பதுதான் அன்பு என்பதை நாம் உணர வேண்டும். கடவுளின் மீது அன்பாக இருக்கிறேன் என்று நாம் நம்புவதன் மூலம் எல்லா செயல்களிலும் பய உணர்வு நீக்கிச் செயல்பட உத்வேகம் பிறக்கின்றது. நம் மீது நாமே அன்பு செலுத்துவதுதான் வழிபாடு. இதைத்தான் மதராசி பல்கலைக் கழகத்தின் தமிழ் **லெக்சிக்கன்** அகராதி ‘அன்பு’ என்ற சொல்லுக்கு **தொடர்புடையாரிடம் மட்டும் உண்டாகும் பற்று** எனப் பொருள் தருகிறது. இதிலிருந்து அன்பு என்பது பெற்றோர், மனைவி, பிள்ளைகள் பிற உறவினர் அனைவரிடமும், பிற உயிர்களிடத்தும் அதுமட்டுமின்றி உலக மக்கள் அனைவரிடமும் அன்பு செலுத்த வேண்டும். பண்டைய தமிழ் நீதி நூல்கள் அன்பு என்பது தொடர்பு


ISBN Number: 978-93-91115-20-3

கொண்டவர்களிடத்து மட்டுமின்றி எவ்வுயிர்களிடத்தும் கொள்ள வேண்டும் என்கிறது.

திருக்குறள் அன்பைப் பற்றிக் குறிப்பிடும் போது அதனை **அகத்துறுப்பு** என்கிறது. பண்டைய தமிழர்கள் அன்பை உடலின் ஓர் உறுப்பாகவே கருதியிருக்கின்றனர் போலும். ஆகவே பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துவதன் மூலம் பல உயிர்கள் இன்று முதியோர் இல்லம் செல்வதை நம்மால் தடுக்க முடியும். ஆகவே அனைவரிடமும் அன்பு செலுத்துவதன் மூலம் நம் வாழ்க்கை பிரகாசமாகும். மதங்கள் உருவாகியது பிரிவினையை ஏற்படுத்த அல்ல, அன்பை ஒழுக்கத்தை போதிப்பதன் மூலம் மனிதன் சிறப்புற வாழ்ந்து இறுதியில் இறைவனை அடைவதற்கே.

**“எல்லாப் புகழும் இறைவனுக்கே”**

## துணைநூற் பட்டியல்

[1] ஆச்சார்யா பி.எஸ். *திருக்குறள்.* நர்மதா பதிப்பகம், சென்னை, 2006.

[2] ஆசீர்வாதம், ஆர்.என். *பரிசுத்த வேதாகமம்*-தமிழ் பைபிள். சுவிசேஷ ஊழிய நூல் நிலையம், சென்னை - 7, 2003.

[3] சந்திரசேகரன், இரா. *சங்க இலக்கியத்தில் பழந்தமிழரின் சூழல் காப்புணர்வு.* ஹனி கோல்டு பதிப்பகம், கோயம்புத்தூர், 2011.

 ISBN Number: 978-93-91115-20-3

[4] தஃப்சீர் இப்னு கஸீரின் (மொ.ஆ). *திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு.* ரஹ்மத் பதிப்பகம், 2022.

[5] பாரதியார். *பகவத் கீதை.* சந்தியா பதிப்பகம் சென்னை, 2008.

[6] புலியூர் கேசிகன். *சங்க இலக்கியம் மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2004.

[7] மாணிக்கவாசகன், ஞா. ஆ. *திருமூலர் திருமந்திரம்* (மூலமும் விளக்க உரையும்). சாரதா பதிப்பகம், சென்னை-1, 2013.

[8] வரதராசனார், மு. *திருக்குறள் தெளிவுரை.* பாரி நிலையம், சென்னை-18, 2014.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-20-3

# Love in the Poems of Bharathiyar

**S. Pavithra,** Research Scholar of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Tamil Nadu, India.

**ORCiD: https://orcid.org/0000-0003-0505-5433**

**Dr. A. Mahalakshmi,** Assistant Professor of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Tamil Nadu, India.

**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**

**DOI: 10.5281/zenodo.8126857**

## Abstract

*This study highlights the importance given to love in Bharatiyar poetry. Love is a feeling mixed with human life. Love is the bridge that connects many relationships. This love is unchangeable.First Bharatiyar poetry books are read and then from that love is analyzed and told. This When talking about the love between parents and children, it can be said that it is an inseparable bond. It is said about the expression of love parents have towards their children and their protective behavior. Also, the bond of love between brothers and sisters breeds a friendship-like relationship. Love between husband and wife is a sacred feeling. Bharatiyar recorded his thoughts on this love. The love found in a joint family has become the octagon in today's times. When man starts living in a narrow circle that is his family, love also becomes narrow. So this article explores the way Bharatiyar has recorded the importance of love.*

**Keywords:** Bharathiar, love, poems, feeling, Relationship.

## References

[1] Usharani, Su. *Bharatiyar Kavithaikal Moolamum Thelivuraium Volume - 1.* Varthamanan Publishing House, Chennai, First Edition- 2019.

[2] Usharani, Su. *Bharatiyar Kavithaikal Moolamum Thelivuraium* Volume - 2. Varthamanan Publishing House, Chennai, First Edition- 2019.
[3] Jeyabal, E. *Agananooru.* New Century Book Store, Chennai, Sixth Edition- 2017.
[4] Thirukkural. (Parimelazakar Urai) Aruna Publishing House, Chennai, September- 2019.
[5] Nagarasan, V. (U.A.). *Kurunthogai*. New Century Bookstore, Chennai, Fifth Edition- 2019.
[6] *Naanmanikkatikai*. Tamil Nilayam, Chennai, Second Edition- 2014.
[7] Parimanam, Ma. Balasubramanian, K. V. (U.A.). *Purananooru*. New Century Book store, Chennai, Sixth Edition- 2017.
[8] Tamil. *Wikipedia.org*.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.


ISBN Number: 978-93-91115-20-3

# பாரதியார் கவிதைகளில் அன்பு

**செ. பவித்ரா**, முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-0505-5433**
**முனைவர் ஆ. மகாலட்சுமி,** நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**
**DOI: 10.5281/zenodo.8126857**

**ஆய்வுச்சுருக்கம்**

*பாரதியார் கவிதைகளில் அன்புக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் குறித்து இவ்வாய்வில் எடுத்துரைக்கப்படுகிறது. அன்பு என்பது மனித வாழ்வுடன் இரண்டற கலந்த ஒரு உணர்வாகும். அன்பு என்பது பல உறவுகளை இணைக்கும் பாலம். இந்த அன்பு மாறாத ஒன்றாகும் .முதலில் பாரதியார் கவிதைகள் நூல்கள் வாசிக்கப்பட்டு பின் அதிலிருந்து அன்பினை பற்றி ஆராயப்பட்டு கூறப்பட்டுள்ளது. இந்த அன்புகளில் பெற்றோர் குழந்தைகளுக்கும் இடையேயான அன்பினை பற்றி கூறும்போது பிரிக்க முடியாத பிணைப்பு என்றே கூறலாம். பெற்றோர் தமது குழந்தைகளின் மீது கொண்ட அன்பின் வெளிப்பாட்டினையும், குழந்தைகளை*

*பாதுகாக்கும் பான்மையையும் பற்றி கூறப்படுகிறது. அத்துடன் சகோதர சகோதரிகளின் அன்பு பிணைப்பு என்பது நண்பனை போன்ற ஒரு உறவுக்கு வித்திடுகிறது. கணவன் மனைவிக்கு இடையேயான அன்பு என்பது புனிதத்துவம் வாய்ந்த ஒரு உணர்வு ஆகும். பாரதியார் இந்த அன்பினை பற்றிய சிந்தனைகளை பதிவு செய்துள்ளார். கூட்டு குடும்பத்தில் காணப்படும் அன்பு இன்றைய காலத்தில் எட்டாம் கனியாக போய்விட்டது. மனிதன் தான் தன் குடும்பம் என்று குறுகிய வட்டத்திற்குள் வாழத் தொடங்கும் போது அன்பும் குறுகிவிடுகிறது. எனவே இக்கட்டுரையில் அன்புக்குண்டான முக்கியத்துவத்தைப் பற்றி பாரதியார் பதிவு செய்துள்ள விதத்தை ஆராய்வதாக அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** பாரதியார், அன்பு, உணர்வுகள், உறவுகள், கவிதைகள்.

**முன்னுரை**

அன்பு என்பது வாழ்க்கையின் ஒரு உணர்வு மிக்க பகுதியாகும். இரு உயிரினங்களை இணைக்கும் பாலம் அன்பை. அன்பு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். மனிதனாகப்பட்டவன் ஒவ்வொரு நிலையிலும் ஏதேனும் ஒருவரிடம் அன்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றான். மனிதன் ஒவ்வொரு

 ISBN Number: 978-93-91115-20-3

சூழ்நிலையிலும் ஒருவர் மீது அன்பு ஒருவர் கொள்கின்றனர். தமிழ் சமூகம் பெரிதும் அன்புக்கும் உறவுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. அன்பு என்பது மகத்துவமான ஒரு உணர்வின் வெளிப்பாடு. பாரதியார் கவிதைகளில் அன்பை வெளிப்படுத்திய விதம் அன்பின் இன்றியமையாமை என்பனப் போன்றச் செய்திகளைச் சான்றுகளுடன் எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும். பாரதியார் அன்புக்கு முக்கியத்துவம் அளித்து பல பாடல்களை கூறியிருக்கின்றார். **அன்பு வாழ்வு என்ற அமைதியில் ஆடுவோம்** அன்பினை வாழ்த்தி **பெண்மை வாழ்க** என்ற பகுதியில் கூறுகிறார். இதேபோல **அன்பென்று கொட்டு முரசு** என்று அன்பிற்கு முழங்கும்படி பாரதியார் முரசு என்ற பாடலில் பாடி இருப்பதைக் காணலாம். சங்க காலம் தொட்டு இன்று வரை அன்பான உறவுகளை நமது நாட்டு மக்களால் போற்றி வளர்க்கப்படுகின்றனர். அன்பானது பெற்றோர் மக்கள் இடையே கொண்டுள்ள அன்பு, அண்ணன் தங்கை மீது கொண்டுள்ள அன்பு, கணவன் மனைவி மீதுள்ள அன்பு, காதலன் காதலி மீதுள்ள அன்பு என பிறப்பு முதல் இறப்பு வரை அன்பு கொள்வதற்கான தேவை அனைவருக்கும் இருக்கிறது. அன்பு கொள்ளாதவரை நாம் இதுவரை காண்பது அரிது. அன்பிற்காக ஏங்குபவர்கள் இன்று வரை நாம் பல இடங்களில் காண்கிறோம்.


ISBN Number: 978-93-91115-20-3

அன்பே அனைத்திற்கும் ஆணி வேராக இருக்கிறது. இந்த அன்பை பாரதியாரின் கவிதை நூல்களில் சான்றுகளுடன் இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

பாரதியார் பெண்கல்வி, தேசபக்தி, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் குயில் பாட்டு போன்ற பல பாடல்களை இயற்றி புகழ்பெற்றிருக்கிறார். இந்த பாரதியாரை பற்றி பல ஆசிரியர்கள் பல நூல்களை எழுதியுள்ளனர். இதில் பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் என்ற நூலை உஷா நந்தினி என்பவர் எழுதியுள்ளார். இந்நூலையே நாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்டுள்ளோம். இந்த நூல் தொகுதி 1 மற்றும் தொகுதி 2 என்ற இரு நூல்களை கொண்டுள்ளது. முதல் தொகுதி தேசிய கீதங்கள், தேசபக்தி பாடல்கள், தேசிய இயக்கப் பாடல்கள், தேசிய தலைவர்கள், பிற நாடுகள், தோத்திரப் பாடல்கள், ஞான பாடல்கள், பல்வகை பாடல்கள் சான்றோர்கள் என பல பாடல்களை உள்ளடக்கிய தொகுதியாகும். இரண்டாவது தொகுதியில் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் குயில் பாட்டு, புதிய பாடல்கள் என குறுங்காப்பியங்களை உள்ளடக்கிய தொகுப்பாகும்.

**பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையே ஆன அன்பு**

பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையேயான அன்பு ஒரு புனிதத்துவம் வாய்ந்த


ISBN Number: 978-93-91115-20-3

அன்பாகும். தாய்க்கும் தனது குழந்தைகளுக்கும் இடையேயான அன்பு என்பது சொற்களால் சொல்ல முடியாத ஒரு அன்பின் உணர்வு. பத்து மாதம் தான் உண்ணும் உணவை உத்திரமாகத் தந்து சுமந்து பெற்றெடுக்கிறாள். தாய் தந்தைக்குமான அன்பில் தாய் பத்து மாதம் சுமந்து பெற்றெடுப்பதை போல் ஆளாகும் காலத்தை விட அதிகமாக தந்தையானவன் தனது தோளிலும் மார்பிலும் சுமந்து அந்த குழந்தைக்கு அளிக்கும் அன்பு என்பது அதிகம். இந்த உறவில் உள்ள அன்பை பாரதியார்,

**உச்சிதனை முகர்ந்தல்**
**உச்சிதனை முகர்ந்தால் கருவம்**
**ஓங்கி வளருதடி மெச்சி உன்னை**
**ஊரார் புகழ்ந்தால் மேனி சிலர்க்குதடி**

**(கண்ணன் என் குழந்தை-4)**

இவ்வரியில் என் குழந்தையை உன் உச்சந்தலையை மோந்து அன்பு கொண்டாள் என் நெஞ்சில் ஒருவித பெருமித உணர்வு மேலோங்குகிறது. உன்னை ஊர் மக்கள் பாராட்டும் பொழுது என் உடலில் ரோமங்கள் சிலிர்க்கிறது கண்ணம்மா என்று இவ்வாரிகளில் பாரதி கண்ணம்மாவை அதாவது கண்ணனை தனது குழந்தையாக பாவித்து பாடல் எழுதியுள்ளார். இதில் ஒரு பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையேயான

 **ISBN Number: 978-93-91115-20-3**

அன்பின் வெளிப்பாட்டையும் ஒரு குழந்தை வளர்ப்பில் பெற்றோர் அடையும் பெருமைகளை இங்கு கூறுகின்றது. இதேபோல்,

**நின்னதன்றோ**
**உன் கண்ணில் நீர் வழிந்தால் என்**
**நெஞ்சில் உதிரம் கொட்டுதடீ! என்**
**கண்ணில் பாவை யன்றோ? கண்ணம்மா**
**என்னுயிர் நின்னதன்றோ**

**(கண்ணம்மா என் குழந்தை -7)**

கண்ணம்மா உன்னுடைய கண்களில் நீர் வழிவதைக் கண்டால் என்னுடைய நெஞ்சில் இரத்தம் வருகிறது. என் கண்ணின் மணி போன்றவளே! என் உயிர் உன்னுடையது அல்லவா! இதில் பெற்றோர் குழந்தையை தனது உயிராக எண்ணி தனது குழந்தை அழுவதை பொறுக்க முடியாமல் வேதனைப்படும் நிலையைக் காணலாம்.

**முர்க்கந் தவிர்த்திடுவாய்**
**சொல்லு மழலையிலே- கண்ணம்மா!**
**துன்பங்கள் தீர்த்திடுவாய்;**
**முல்லைச் சிரிப்பாலே –எனது**
**மூர்க்கந் தவிர்த்திடு வாய்**

**(கண்ணம்மா என் குழந்தை- 8)**


ISBN Number: 978-93-91115-20-3

நீ பேசும் மழலை மொழியினிலே என் வேதனைகளை நீக்கி விடுகின்றாய். உன் அழகிய முல்லைப் பூவை போன்ற சிரிப்பினிலே என் கோபத்தை தணித்து விடுகின்றாய் என்ற பாடலில் குழந்தைகள் செய்யும் அழகிய செயல்களை காணும்போதும் பெற்றோர்கள் அடையும் மகிழ்ச்சியை பாரதியார் கூறுகின்றார். இதேபோல் கண்ணன் பாட்டில்

**அன்பொடவள் சொல்லி வருவாள் –அதில்**
**அற்புதமுண்டாய் பரவசமடைவேன்**

**(கண்ணன் என் தாய்-2)**

இப்பாடலில் அன்போடு கண்ணனாகிய தாய் கதையை சொல்லிக் கொண்டு வருவாள் நான் அவற்றைக் கேட்டு என்னை மறந்து விட்டால் கண்ணனோடு கரைந்து விடுவேன் என்று கண்ணனை தாயாகப் பாவித்து தாய் கதை சொல்வதைக் கேட்டு எல்லா குழந்தைகளும் உறக்கம் கொள்ளும் தன்மையை எடுத்துரைக்கிறார். புதல்வரைப் பெறுதல் என்று குழந்தை பேற்றைப் பற்றி வள்ளுவர் ஒரு அதிகாரத்தையே படைத்திருக்கிறார். அதில்,

**அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ் (குறள்-64)**

தன் குழந்தை சின்ன கைகளால் கரைப்பது அமிழ்தத்தை விட சிறந்த சுவையானதாகும். இங்கு மழலைக்

 ISBN Number: 978-93-91115-20-3

குழந்தையின் விளையாட்டை வள்ளுவர் தமது குறளில் கூறுவதைக் காணலாம். **ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்... (குறள் - 69)** தன் மகனே அறிவாளி என்று பிறர் சொல்ல வேண்டும் என்று நினைப்பாள் தாய் என்ற குறளில் தாய் தன் மகன் மீது கொண்ட அன்பையும் பெருமையையும் காணலாம். இதேபோல் மற்றொரு பாடலில் ஒரு தந்தை மகன் மீது கொண்ட அன்பினை,

**இன்பத்தை இனிதெனவும் துன்பம்**
**இனிதில்லை என்றும் அவன் எண்ணுவதில்லை**
**அன்பு மிகமுடையான் (கண்ணன் என் தந்தை-6)**

என் தந்தை எப்பொழுதும் இன்பத்தை மகிழ்ச்சியானது என்றும் துன்பத்தை கசப்பானவை என்றும் நினைப்பதில்லை. என் மீது மிகுதியான அன்பு உடையவன் என்று பாரதியார் தன்னை குழந்தையாகவும் கண்ணனை தனது தந்தையாகவும் எண்ணி தன் தந்தை தன் மீது கொண்ட அன்பினை இங்கு விளக்குகிறார். இதுபோல நற்றிணைப் பாடலில்,

**கொண்ட கொழுநன் குடி வறன் உற்றென**
**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்**
**ஒழுகு நீர் நுணங்கு அறல் போல பொழுது**
**மறுத்து உண்ணும் சிறு மதுகையாலே!**

**(நற்றிணை - 110)**


ISBN Number: 978-93-91115-20-3

சிறு விளையாட்டுப் பிள்ளையாய் தந்தை வீட்டில் செல்வச் செழிப்புடன் வளர்ந்த தலைவி. குடும்ப பெண்ணுக்குரிய அறிவையும் ஒழுக்க நெறியையும் எங்கு உணர்ந்துகொண்டால் எனத் தெரியவில்லை. ஆனால் தனது கணவன் குடும்பத்தில் வறுமை நிலையிலும் தன் தந்தை அனுப்பி வைத்த உணவை உண்ண மறுத்து விட்டு தனது கணவன் வீட்டு உணவை ஒரு வேளை பட்டினி கிடந்து மறுவேளை உண்ணுகிறாள். இதில் தந்தை தாயின் அன்பை நிலையை பற்றி பெருமையாகற கூறப்படுவதை காணலாம். தம் மக்களின் உடம்பைத் தொடுதல் உடலுக்கு இன்பமாகும். அவர்களின் மழலைச் சொற்களைக் கேட்டல் செவிக்கு மிகுந்த இன்பமாகும். என்று தந்தை தன் குழந்தைகளை எண்ணி மகிழ்ச்சி அடைந்து அன்பு கொள்வதைக் காணலாம். **மகன் உரைக்கும் தந்தை நாலத்தை ஒருவன் (நான்மணிக் கடிகை - 68)** என்ற நான்மணிக்கடிகை வரியில் தந்தையின் தன் மகன் மீது கொண்ட அன்பாயினும் தந்தை தன் மகனை எவ்வாறு வழிநடத்தினார் என்பதையும் அந்த மகன் செய்யும் காரியத்தின் மூலமே பிறர் தந்தையின் குணத்தை பற்றி அறிந்து கொள்வர் என்று நான் மணிக்கணியை உரைக்கிறது. குழந்தைகளுக்கு அன்பு என்பதும் அழகிய ஒரு உணர்வின் வெளிப்பாடாகும். கோவமாயினும் மகிழ்ச்சியாயினும் ஒரு

 ISBN Number: 978-93-91115-20-3

குழந்தை அனைத்தையும் தன் பெற்றோரிடமே வெளிப்படுத்துகிறது. அதேபோல் பெற்றோரும் தன் குழந்தைக்காக படும் பாடு மிகவும் கடினமானது. தன் குழந்தை இச்சமூகத்தில் ஒரு நல்ல நிலையை அடைய வேண்டும் என்பதற்காக ஒரு வேலை மட்டுமல்லாமல் பல வேலை பட்டினி கிடந்து உழைப்பது பெற்றோர் மட்டுமே ஆவர். குழந்தைகளுக்கு உண்மையான ஒரு உறவு என்றால் அது பெற்றோர் உறவு மட்டுமே என்பதை இதன் காணலாம்.

**சகோதர சகோதரிகள் மீது கொண்ட அன்பு**

தாய் தந்தை அன்புக்கு அடுத்து ஒரு தங்கையும் ஒரு தம்பியும் மடியில் சாய்ந்து கொள்ளும் ஒரு இடம் சகோதர சகோதரிகளின் மடியே. இவ்வன்பு சகோதர சகோதரிகளுக்கு மட்டுமின்றி அவர்களுடன் பிறந்தவர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தாக பார்க்கப்படுகிறது. அண்ணன் தங்கை உறவானாலும் அக்கா தங்கை உறவானாலும் ஒரு நண்பனைப் போன்று பழகும் உறவாகும். இந்த அன்பை போல வேறு உறவை நம்மால் பார்க்க முடியாது. தாய் தந்தைக்கு அடுத்து அன்பும் அரவணைப்பும் கிடைக்கும் ஒரு முக்கிய உறவு அண்ணன் அக்கா உறவே ஆகும். இந்த அன்பு வாய்ந்த உறவுக்கு பெருமை அளிக்கும் படி பாரதியார் பாஞ்சாலி சபதத்தில்,

 ISBN Number: 978-93-91115-20-3

**வென்றி பெருந்திரு வடிவாய்!நினது சொல்லை**
**மீறி ஒரு செயல் உண்டோ?**
**ஆண்டான் ஆணை**
**யன்று அடியார் தமக்குக் கடன் வேறுண்டோ?**
**ஐயனே பாண்டவர் தாம் ஆவி நீயே !**

**(பாஞ்சாலி சபதம் - 143)**

பாண்டவர்கள் நால்வரும் தனது அண்ணன் தருமனை வணங்கி நின்று உனது வார்த்தையை மீறி ஒரு செயலும் செய்ய மாட்டோம். அரசனான உனது கட்டளைகளை தவிர தொண்டர்களாக எமது கடமை வேறு எதுவுமில்லை. எமது உயிர் நீ என சகோதரர்கள் தமது அண்ணன் மீது கொண்ட பாசத்தை விளக்குவதாக கூறுகின்றார் பாரதியார். இது போல மற்றொரு பாடலில்,

**வம்பு மொழி பொறுத்தருள்வாய் வாழி! நின் சொல்**
**வழிச் சொல்வோம் எனக் கூறி வணங்கி சென்றார்**

**(பாஞ்சாலி சபதம் - 144)**

நாங்கள் உன்னை பேசிய வார்த்தைகளை மன்னிப்பாயாக நீ வாழ்க உன் கட்டளைப் படி நடப்போம் என நால்வரும் தருமனை வணங்கி நின்று விட்டு இருப்பிடம் சென்றனர். இப்பாடலில் தன் சகோதரர் மீது கொண்ட மரியாதையையும் அன்பையும் பற்றி உணர்த்துகின்றனர் பாண்டவர்கள். அத்துடன் பாரதியார்,


ISBN Number: 978-93-91115-20-3

**உடன்பிறந்தர்களை போலே-இவ்**

**வுலகில் மனிதரெல்லாரும்**

**(பல்வகை பாடல்கள் முரசு- 21)**

என்ற பாடலில் பூமியில் வாழ்கின்ற மாந்தர்கள் அனைவரும் சகோதரர்களை போன்றவர்கள் என்று நம் மக்களிடையே சகோதரத்துவத்தை பாரதியார் ஊக்குவிப்பதைக் காணலாம். இதேபோல் பாஞ்சாலி சபதத்தில்,

**அன்பும் பணிவும் ஒரு கொண்டால்**

**அணுவாயெனும் தன் சொல் வழாதவர்**

**(பாஞ்சாலி சபதம் - 137)**

அன்பும் பணிவும் வடிவெடுத்தது போன்று தம்பிமார்கள் அணுவளவு கூட தன் சொல்லை தட்டி நடக்காதவர்கள் என்று தருமன் தன் சகோதரர்களின் அன்பினை எடுத்துரைக்கிறார். நற்றிணையில்,

**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**

**அன்னை கூறினள் புன்னையது நலனே**

**அம்ம நானுதும் நும்மொடு நகையே (நற்., பா. 172)**

என்ற பாடலில் புன்னை மரத்தை தனது தங்கையாக எண்ணுவதாக தலைவி கூறுகின்றாள். அதாவது நான் தோழியரோடு விளையாடும்போது புன்னை கொட்டையை மறைத்து விளையாடினோம். அது முளைத்து கொண்டது. அது உனக்கு உடன்பிறந்தவள்


ISBN Number: 978-93-91115-20-3

என என் தாய் என்னிடம் கூறிவிட்டாள். அதனால் என் தங்கை அருகில் உன்னோடு சிரித்துக்கொண்டு விளையாட வெட்கமாக இருக்கிறது என தலைவி தலைவனிடம் கூறுகிறாள். இதில் மரத்தை ஒரு உயிராகவும் தனது சகோதரியாகவும் எண்ணி அதன் மீது அன்பு கொண்டு சங்ககால மக்கள் விளங்கியதைக் காணலாம் இது போலவே புறநானூற்றில்,

**தோல்தா; தோல்தா என்றி ; தோலொடு**
**துறுகல் மறையினும் உய்குவை போலாய்;**
**நெருநல் எல்லைநீ எறிந்தோன் தம்பி,**
**அகல்பெய் குன்றியின் சுழலும் கண்ணன்,**
**பேரூர் அட்ட கள்ளிற்கு**
**ஓர் இல் கோயின் தேருமால் நின்னே.**

**(புறநானூறு, பா. 300)**

பகைவரின் படை வீரன் ஒருவனை கொன்றான். கேடயத்தை கொடு என தன்னை பாதுகாத்துக்கொள்ள கேட்கின்றான். அதில் ஒருவன் கேடயத்தை மட்டுமின்றி பெரிய கல்லை வைத்து உன்னை மறைத்துக் கொண்டாலும் உன்னால் தப்ப முடியாது. ஏனென்றால் நேற்று நீ கொன்றாயே அவன் தம்பி உன்னை தேடி வருகிறான். கொல்வதற்கு என எச்சரிக்கின்றான் என்ற பாடலில் தன் சகோதரனை கொன்றவனை பழி தீர்க்க


ISBN Number: 978-93-91115-20-3

தம்பி வருவது தன் அண்ணன் மேல் கொண்ட அளவற்ற பாசத்தை இங்கு பார்க்க முடிகிறது.

**கணவன் மனைவி உறவு**

கணவன் மனைவி உறவில் அன்பு என்பது இன்றியமையாதது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்வதே இந்த வாழ்க்கை .இந்த உறவில் காதல் (அன்பு) முக்கியமான ஒன்று. நமது சமுதாயத்தில் அனைவராலும் மதிக்கதக்க ஒரு அன்பின் வெளிப்பாடு இவ்வுறவு ஆகும்.இவ்வுறவு மகிழ்ச்சி, காதல், நட்பு, வீரம், கோபம், வருத்தம், அழுகை என அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு அன்பின் பெட்டகமாகும். இவ்வன்பினைப் பற்றி பாரதியார்,

**கண் உறங்கலெனுங் காரிய முண்டோ!**
**கண்ணனைக் கையிரண்டுங் கட்ட லின்றியே!**

**(கண்ணன் என் காதலன் -6)**

கண்ணன் என்னும் என் காதலன் எனக்காக காத்து நிற்கின்றான். தெருமுனையில் வேலியோரத்தில் என்னை பார்க்க வா. எனக் கூறியிருக்கின்றனர். பாங்கியர்போன பின்பு நான் தனியாக சென்று என் கண்ணனை என் இரு கரங்களால் தழுவிக் கொள்ளாமல் என் கண்கள் உறக்கம் கொள்ளாது. கண்ணனை தலைவனாகவும்தன்னை தலைவியாகவும் கொண்டு தான் தன் காதலன் மீது


ISBN Number: 978-93-91115-20-3

கொண்ட அன்பை விளக்குகின்றார். இதுபோல கண்ணன் பாட்டில் மற்றொரு இடத்தில்,

**கன்னிகையாய் இருந்து தங்கமே தங்கம் நாங்கள்**
**காலம் கழிப்பமடி தங்கமே தங்கம் அன்னிய**
**மன்னர் மக்கள் பூமியில் உண்டாம் என்னும்**
**அதனையுஞ் சொல்லிடடி தங்கமே தங்கம்**
**(கண்ணன் என் காதலன்- 2)**

என்ற பாடலில் கண்ணனிடம் தோழி தூது விடுவதாக அமைகிறது. என்னை அந்த கண்ணன் வந்து திருமணம் செய்ய செய்து கொள்ள வில்லை என்றால் .நான் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்து விடுவேன். அப்படி இல்லை என்றாலும் அவரை தவிர நான் திருமணம் புரியும் வகையில் வேறு தேசத்தை சேர்ந்த அரசர்கள் பலர் இந்த மண்ணில் உள்ளனர் என கூறி வா தங்கமே என்கின்றாள் பாரதி என்னும் தலைவி. இதில் கண்ணனை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆசையினால் அல்லது அன்பினால் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைகிறது. இதுபோன்று குயில் பாட்டில் குயில் கொண்ட காதலை விளக்குகிறார்.

**கூடல், கூடல், கூடல்**
**கூடிப் பின்னே குமரன் போயின்**
**வாடல், வாடல், வாடல் (குயில் பாட்டு- 2)**


ISBN Number: 978-93-91115-20-3

தலைவனோடு கூடியிருப்பது என்பது மகிழ்ச்சி தரும் பின்பு அத்தலைவன் நம்மைப் பிரிந்து சென்று விட்டால் அது நமக்கு துன்பம் தரும் என்று குயில் பாடுகிறது. இதில் குயிலின் காதல் பிரிவால் வாடும் நிலையைப் பற்றி குயிலே பாடுவதாக அமைகிறது.இங்கு குயிலின் காதல் அன்பு இங்கு புலப்படுகிறது.

**காதல், காதல், காதல்**
**காதல் போயிற் காதல் போயிற்**
**சாதல் ,சாதல் ,சாதல் (குயில் பாட்டு -2)**

என்பதில் காதலே மனித வாழ்க்கையின் அடிப்படை உறவு. அந்த காதல் இல்லாமல் போய்விட்டால் மரணமே உண்டாகும் என குயில் தன் காதலை நினைத்துப் பாடுகிறது. காதல் மனிதனுக்கு மட்டுமின்றி அனைத்து உயிருக்கும் பொதுவான ஒன்றே ஆகும். எனில் தனது காதலை நினைத்து பாடிக் கொண்டிருப்பதை தான் கேட்டதாக தன் கற்பனை உணர்வை குயிலின் மூலம் வெளிப்படுத்துகின்றார் பாரதியார். காதலைக் குறுந்தொகையில்,

**நல்லுரை யிகந்து புல்லுரை தாஅய்ப்**
**பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல**
**உள்ளந் தாங்க வெள்ளம் நீந்தி**
**அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்**

**(குறுந்தொகை, பா. 8)**


ISBN Number: 978-93-91115-20-3

தலைவியை காணமுடியாது என்று மனதிற்கு துன்பம் தரும் உரைகளை கேட்டு வருத்தப்படும் நெஞ்சே!காதலியை வேண்டாம் என்று தூக்கி போட முடியவில்லை. அவளை நெருங்கவும் முடியவில்லை. அவள் பிரிவு வருத்தமளிப்பதாக தலைவன் தலைவி பிரிவை நினைத்து வருந்துவதாக அமைகிறது .இங்கு காதல் உறவில் அவள் மீது கொண்ட அன்பு அதனால் பிரிவு என்பது துன்பத்தை தருவதாக கூறுகின்றார். இந்த காதல் உணர்வை வள்ளுவர் குறளில்,

**கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**

**ஒண்தொடி கண்ணே உள (குறள் - 1101)**

கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் உற்றும் அறிகின்ற ஐந்து புலன்களாகிய இன்பங்களும் ஒளி பொருந்திய வளையல் அணிந்த மனைவியிடம் மட்டுமே உள்ளது என கூறுகிறார் .இங்கு அனைத்து இன்பங்களும் மனைவியிடம் மட்டுமே உள்ளது என்றும் கணவன் மனைவி மீது அன்பு செலுத்த வேண்டும் என்பது முக்கியம் என கூறுகின்றார்.

**பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**

**தன்நோய்க்குத் தானே மருந்து (குறள் - 1102)**

என்ற குறளில் நோய்களைத் தீர்க்கும் மருந்துகள் பல உள்ளன. ஆனால் காதல் நோயைத் தீர்க்கும் மருந்து


ISBN Number: 978-93-91115-20-3

அந்தக் காதலியே ஆவாள். இங்கு தனது காதல் வருத்தத்தை தீர்க்கும் மருந்து தன் காதலி தான் என்று காதல் அதாவது அன்பிற்கு முக்கியத்துவம் அளித்து கூறப்பட்டுள்ளது. இதே போல் அகநானூற்றில் குறிஞ்சித் திணை பாடலில்,

**குறியா இன்பம், எளிதின், நின் மலைப்**
**பல் வேறு விலங்கும், எய்தும் நாட!**
**குறித்த இன்பம் நினக்கு எவன் அரிய?**

**(அகநானூறு, பா. 2:8-1)**

என்ற பாடலில் தலைவனிடம் தோழி கூறுகிறார். அவள் உன் மீது அன்பு கொள்வது அவ்வளவு கடினமானதா இல்லை எளிமையானது என்று தோழி கூறுவதாக அமைந்தது. குறுந்தொகை மற்றொரு பாடலில் அன்பினை,

**யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்?**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.**

**(குறுந்தொகை, பா. 40)**

இப்பாடலில் என் தாயும் உன் தாயும் எவ்வாறு உறவினர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவானவர்கள்? எந்த உறவின் வழியாக நீயும் நானும்


ISBN Number: 978-93-91115-20-3

ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டோம்? செம்மண்ணில் பெய்த மழை நீர் எவ்வாறு அம்மண்ணோடு ஒன்று கலந்து பிரிக்கமுடியாதவாறு ஆகிவிடுகிறதோ அதைப்போல ஒன்றுபட்ட அன்பினால் நம் நெஞ்சங்களும் ஒன்று கலந்தன. (அதனால் நெஞ்சம் ஒன்று கலந்த நம் அன்பும் என்றும் பிரியாது. மண்ணோடு கலந்த நீரை எப்படி பிரிக்கமுடியாதோ, அவ்வாறே நம்மையும் பிரிக்க முடியாது.) என்ற பாடல்களின் மூலம் அன்பின் வெளிப்பாட்டை கணவன் மனைவி இடையேயான அன்பில் காணலாம்.

**தாய்மாமன் உறவு**

தாய்க்கு அடுத்தாட்போல் கூறப்படும் உறவுகளில் முக்கியமான உறவு தாய் மாமன் உறவு குழந்தை பிறந்தவுடன் சீர் செய்தல் காதணி விழா தொடங்கி வெண் பூப்படைந்தாலும் திருமணம் செய்வதற்கு என அனைத்துக்கும் தாய் மாமன் சீர் செய்து தான் அனைத்து நிகழ்வுகளும் நடைபெறுகிறது தாய்மாமன் உறவை போற்றுவது என்பது இன்றுவரை நாம் காண முடிகிறது இந்த உறவை பற்றி பாரதியார் கவிதையில் பாஞ்சாலி சபதத்தில் வரும் துரியோதனன் மற்றும் சகுனியின் உறவினை,

**இன்று தருகுவன் வெற்றியே-இதற்குஇத்தனை வீண்**


ISBN Number: 978-93-91115-20-3

**சொல் வளர்ப்பதேன் (பாஞ்சாலி சபதம்- 53)**

துரியோதனன் பாண்டவர்களின் செல்வச் செழிப்பினை எண்ணி வருந்தி புலம்பி கொண்டிருப்பதை பார்த்த சகுனி இன்றைக்கே நான் உனக்கு வெற்றியை அளிக்கிறேன் இதற்கு எதற்கு இத்தனை வீண் சொற்களும் என்கின்றான் சகுனி இந்த இடத்தில் சகுனி தன் மருமகனின் வருத்தத்தை போக்கும் பொருட்டு அவனுக்கு மகிழ்ச்சி அளிப்பதற்காக உரைப்பதைக் காணலாம். இதேபோல்,

**வண்டரை நாழிகை ஒன்றிலே தங்கள்**
**வான் பொருள் யாவையும் தோற்றுணைப் பணி**
**தொண்டரெனச் செய்திடுவன் யான்**

**(பாஞ்சாலி சபதம் -54)**

என்ற வரிகளில் பாண்டவர்களின் வானளவு உயர்ந்த செல்வங்கள் அனைத்தையும் ஒரு நாழிகை பொழுதில் சூதாட்டத்தில் அழித்துவிட்டு அனைத்தையும் இழக்கும் படி செய்துவிட்டு உன்னை வணங்கி பணிந்தெடுச் செய்வேன் என்று சகுனி மகிழ்ச்சி அளிக்கும் பொருட்டு துரியோதனனிடம் கூறுகிறார். இங்கு துரியோதனன் மீது கொண்ட அன்பின் வெளிப்பாட்டை காணலாம்.

**இங்கிது கேட்ட சுயோதனன் –மிக**
**இங்கிதம் சொல்லினை மாமனே! என்று**
**சங்கிலி பொன்னின் மணி இட்ட**
**ஒளித்தாமன் சகனிக்கு சூட்டினான்**

 ISBN Number: 978-93-91115-20-3

**(பாஞ்சாலி சபதம் - 57)**

என்ற பாடலில் என் மனதிற்கு இனிமையான செய்தியை கூறினாய் மாமா என்று கூறி மகிழ்ச்சியில் தங்கத்தால் பிரகாசமான மாலையை சகுனிக்கு அணிவித்தாள் தன் மாமன் சொன்ன செய்தியின் மகிழ்ச்சி மற்றும் அன்பினால் நகையை பரிசாக துரியோதனன் அளிப்பதை காணலாம். இதே போல் தாய்மாமன் என்பது குழந்தைக்கு முக்கியமான ஒரு உறவு என்பது சகுனி சூழ்ச்சி செய்யனும் தன் மருமகனுக்காக சூதாட்டத்தில் ஈடுபடுவதை காணலாம் இதே போல் தாய்மாமன் செய்யும் சீரை தாலாட்டு பாடலில்,

**கண்ணான அம்மாளுக்கு - ஏன் அம்மா**
**காது குத்த போறாங்கன்னு**
**கிண்ணியில் சந்தனமும்**
**கிளி மூக்கு வெத்தலையும் தங்கத்தினால் ஆபரணமும்**
**என்னம்மாவுக்கு**
**கொண்டு வந்தார்**

**தாய்மாமன் (தாலாட்டு பாடல், tamil.wikipedia . org )**

என தாலாட்டு பாடலில் தாய் மாமன் அன்பும் அரவணைப்பும் ஒருவருக்கு முக்கியமானது என்பதை இந்த தாலாட்டு பாடல்கள் எடுத்துரைப்பதை காணலாம்.


**ISBN Number: 978-93-91115-20-3**

## நட்பு எனும் அன்பு

நட்பு என்பது நண்பர்களுக்கிடையே ஏற்படும் ஒரு உறவாகும் இந்த உறவிற்கு வயது மொழிநாடு இனம் என எதுவும் தேவையில்லை இவ்வுலகில் ஒருவருக்கொருவர் உண்மையாக ஒளிவு மறைவின்றி பழகுவர். சங்க காலம் தொட்டு இன்றுவரை இவ்வளவு போற்றப்பட்டு வரும் ஒரு உறவாகும் ஆண் பெண் என்ற வேதம் இன்றி பழகும் உறவு ஆகும். இந்த நட்பு எனும் அன்பை பாரதியார், **சேர்க்கை அழியேல் (புதிய ஆத்திச்சூடி- 61)** என்ற புதிய ஆத்திச்சூடி வரியில் எப்பொழுதும் பிறர் நம்மோடு நட்பு கொள்ளும்படி பேச வேண்டும் என்கின்றார் பாரதியார். இதே போல், **நட்புக் குருவியே, ஞாயிற்றிள…(தனிப்பாடல், காலைப் பொழுது - 12)** என்ற வரியில் என் தோழமைக்குரிய குருவியே என குருவியை தன் தோழராக பாரதியார் குறிப்பிடுவது என்பது தனித்துவம் வாய்ந்த பாரதியாரின் வரியாகும். இதேபோல் கண்ணன் பாட்டில் கண்ணனை தன் தோழனாகவும் தன்னை அர்ஜுனன் ஆகவும் பாவித்து பல கவிதைகளை நட்புக்காக எழுதி இருக்கிறார் பாரதியார் அதில்,

**அன்பர் கூட்டத்திலேயிந்தக் கண்ணனைப்**
**போல் அன்புகொண்டவர் வேருளரோ?**

**(கண்ணன் என் தோழன் -4)**


ISBN Number: 978-93-91115-20-3

என்ற வரியில் என்மீது அன்பு கொண்டவர்களில் இந்த கண்ணனைப் போல நேசம் கொண்டவர்கள் வேறு யாரும் இல்லை என கண்ணனின் அன்பை பெறுமிடப் படுத்துவதை காணலாம். இதே போல் மற்றொரு வரியில், **ஏழைகளை தோழமை கொள்வான் (கண்ணன் என் தந்தை -5)** என்ற பாடலில் என் தந்தையான கண்ணன் ஏழைகளுடன் நட்பு கொள்ள விரும்புகிறான் என்ற இடத்தில் பாகுபாடு இன்றி வறியவர்களுடனும் நட்பு பாராட்டுவான் என் தந்தை என பாரதியார் கண்ணனை குறிப்பிடுவதை காணலாம். இதேபோல் அவ்வை அதியமானின் நட்பு என்பது பெரிதும் போற்றப்பட்ட நட்பாகும் அதியமான் ஔவையார் மீது மிக ஆழமான நட்பு கொண்டிருந்ததால் உயிரை காக்க வல்ல நெல்லிக்கனியை அவ்வையாருக்கு வழங்கினார். இதனை, **சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே (புறநானூறு -235)** அளவு கள் கிடைக்குமானால் அதனை முழுமையாக எனக்கு உன்னை கொடுத்து விடுவான் அது தீர்ந்து போனாலும் மீண்டும் கள் கிடைக்குமானால் அதனையும் எனக்கு கொடுத்துவிட்டு நான் பாட கேட்ப்பான் என அதியமான் தன் மீது கொண்ட அன்பினாலே இவ்வாறு செய்கிறார் என்பதை கூறுகிறார் அவ்வையார். இதுபோல் கோப்பெருஞ்சோழன் மற்றும் பிசிராந்தையாரின் நட்பு என்பது மிகச் சிறந்தது


ISBN Number: 978-93-91115-20-3

கோப்பெருஞ்சோழன் இறப்பதற்கு முன்னர் என் நண்பன் பிசிர் என்னும் ஊரைச் சேர்ந்தவன். அவன் என்னை தேடி வருவான் அவன் நான் பணத்தோடு இருக்கும்போது என்னிடம் வராமல் விட்டாலும் நான் துன்புறும் காலத்தில் நிச்சயம் என்னை தேடி வருவான் எனக் கூறிவிட்டு வடக்கு திசை நோக்கி உயிர் விட்டார் அதேபோல் அவர் இறந்து இரண்டு நாட்களில் திரும்பி வருகிறார் பிசிராந்தையார். நடந்ததை கேட்டு வேதனை கொள்கிறார் பின் இறக்கும் தருவாயில் நட்பினை மறவாமல் கோப்பெருஞ்சோழனை புதைத்த இடத்திற்கு அருகே தானும் வடக்கு நோக்கி உயர்துரக்கிறார். இதில் கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் கொண்டிருந்த அளவற்ற அன்பு வெளிப்படுகிறது. என்பதை,

**கவைக் கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்**
**தாதொரு மறுகின் போதொடு பொதுளிய**
**வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ,**
**ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை**
**அவரை கொய்யுநர் ஆர மாந்தும்**
**தென்னம் பொருப்பன் நன்னாட்டு உள்ளும்**
**பிசிரோன் என்ப, என் உயிர்ஓம் புநனே;**
**செல்வக் காலை நிற்பினும்,**
**அல்லற் காலை நில்லலன் மன்னே**

**(புறநானூறு -215)**


ISBN Number: 978-93-91115-20-3





என்று வரிகளில் கோப்பெருஞ்சோலன் பிசிராந்தையார் கிடையேவான அன்பின் மகத்துவத்தை எடுத்துக் கூறுகிறது.இதேபோல் வள்ளுவரும் நட்பினை பற்றி தனது குறளில்,

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**

**அகநக நட்பது நட்பு. (திருக்குறள் - 786)**

என்ற குறளில் முகம் மட்டும் மலரும் படி நட்பு கொள்வது நட்பு அன்று, நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்பு செய்வதே நட்பு ஆகும்.என்று வள்ளுவரும் நட்புக்கு சிறப்பு செய்யும்படி ஒரு அதிகாரத்தையே படைத்திருப்பதைக் காணலாம். இவ்வாறு நட்பு என்பது சுக துக்கங்களை பகிர்ந்து கொள்ளும் ஒரு அன்பான உறவு எனலாம்.

**முடிவுரை**

மனிதன் தன் வாழ்நாளில் அன்பு ஒன்றையே அடைக்கலமாக கொண்டு வாழ்கின்றான். இந்த அன்பில் நிலைகள் மாறுபடலாம் ஆனால் அன்பு என்றும் மாறுபடாது பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கிடையே ஆன அன்பின் பாங்கையும் கணவன் தன் மனைவிகளுக்கு இடையே காணப்படும் அன்பின் பிணைப்பினையும் பற்றி ஆராயப்படுகிறது அத்துடன் ஒரு சகோதர சகோதரிகளுக்கு இடையேயான அன்பில் காணப்படும் சிறப்புகளையும் அவ் அன்பின்


ISBN Number: 978-93-91115-20-3

தன்மைகளையும் பற்றி ஆராயப்படுகிறது.குடும்பத்தில் காணப்படும் அன்பினால் கிடைக்கும் உறவுகளின் மகத்துவத்தை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**துணை நின்ற நூல்கள்**


[1] உஷாராணி, சு. *பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் தொகுதி* - 1. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 2019.

*[2]* உஷாராணி, சு. *பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும்*

[3] *தொகுதி* - 2. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு- 2019.

[4] செயபால், இ. *அகநானூறு*. நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, ஆறாம் பதிப்பு- 2017.

[5] *திருக்குறள்*. (பரிமேலழகர் உரை) அருணா பதிப்பகம், சென்னை, செப்டம்பர் - 2019.

[6] நாகராசன், வி. (உ.ஆ). *குறுந்தொகை*. நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, ஐந்தாம் பதிப்பு- 2019.

[7] *நான்மணிக்கடிகை*. தமிழ் நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு- 2014.




**ISBN Number: 978-93-91115-20-3**

[8] பரிமணம், மா. பாலசுப்ரமணியன், கு. வே. (உ.ஆ). *புறநானூறு*. நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, ஆறாவது பதிப்பு- 2017.

[9] *தமிழ். விக்கிபீடியா.*

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-20-3